பதிவு எண் 2041 | மகாத்மா காந்தி வாழ்க | தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா; வெளி நாடு 1½ அணா

வருட சந்தா முன் பணம் ...	ரூ 3—0
6 மாத சந்தா ,, ...	ரூ 1-12
வெளி நாட்டிற்கு ,, ...	ரூ 4—0

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ.	12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ	2.
தனி விகிதமும் உண்டு.	

மாலை 3 | ஈரோடு, பிரபவ ஸ்ரீ ஆவணி மீ 26உ (11—9—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 20.

இனும்! இனும்!! இனும்!!!

பெண்களுக்கு

அழகான புடவை! உயர்ந்த மல்லில், பச்சை, புளூ, வயலெட், கருப்பு, செம்பு, ஸ்டீப் கலர்கள் கெட்டிச்சாயம். பளப்பளப்பான வசீகரத்தோற்றமுள்ளது.

2¾ அகலம் 18 முழம் புடவை ... ரூ. 4—4—0
5 முழம், அசல் பட்டு, குஞ்சம் கட்டின
ஷில்க் அங்க வஸ்திரம் ... ... ரூ. 4—8—0
2¾ அகலம் 7½ முழம் அழுத்தமான கை
நெசவு வேஷ்டி ஜோடி ... ... ரூ. 4—6—0
"ஸ்பெஷல்" கேட்லாக் இனும்!

The Madura Oriental Trading Co.,
Laxmi Cloth Store, MADURA.

கணித சோதிடம்

பரித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று லகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916ஸ்ரீ ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும் தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினியரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

13-ம் வருடம் பிறந்து விட்டது. 13-ம் வருடம் பிறந்து விட்டது

'ஆனந்தபோதினி".

ஓர் உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை.
48-பக்கங்களில் உயர்ந்த வியாசங்களுடன் வெளிவருவது.
தமிழ் நாட்டில் உள்ள மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது.
13-வருடங்களாக நடைபெற்றுவருவது
20,000 சந்தாதாரர்களையுடையது. எல்லோரும் படிக்கத்தக்கது
இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய உள்நாடுகளுக்கு வருட சந்தா ரூ. 1—0—0
பினாங்கு, சிங்கப்பூர், நெட்டால் முதலிய வெளி நாடுகளுக்கு
வருட சந்தா ரூபாய் 1—4—0 மாதிரிக் காப்பி இனும்.
விலாசம்:—ஆனந்தபோதினி ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்

சுப்பிரமண்யர் கவசசத்து.

சகலகாரியங்களும் அனுகூலம். சகலவசியங்களும் ஏற்படும். விசுவாசம், வியாதியை கொடுக்கும் பயங்கரங்கள் நீங்கும் தரித்திரம் முதலியது அனுகாது.

சத்து 1-க்கு விலை ரூ. 2 தபால் சிலவு வேறு

இன்னும் வேறு விஷயங்களுக்கும் எழுதி தெரிந்து கொள்ளவும். அன்னிய நாட்டு வாசிகள் முன் பணம் தபால் சிலவுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

வி எஸ் அய்யர், சுப்பிரமண்ய உபாசி
பழனி. Palni P. O. (S. I.)

தீராத குஷ்ட ரோகங்களை தீர்க்கும் வல்லமையுடைய பழனி ஸ்ரீமத் சற்குரு மகாதேவ ஸ்வாமிகளின் முதல் நெ. தாம்பர பற்பமேயாகும். ஏராளமான குஷ்ட ரோகிகள் இப்பழனியிலும், வெளியூர்களிலும், சௌக்கிய மடைந்து புகழ்ந்து கொண்டாடி வருகிறார்கள், நண்பர்கள் நேரில் விசாரித்தால உண்மை தெரிய வரும். நன்றாய் கவனித்து உண்மையை தெரிந்து வாங்கி உபயோகியுங்கள். நமக்கு அண்டப் புளுகு புளுகதெரியாது.

அசட்டையால் வரும் ஆபத்தை நீக்கி, யோசிக்கும் திறமையால் குணம் பெறலாம்:

அறிக்கை:—என் குருநாதர் ஹரித்துவாரம் மங்களபுரி பாவாஜி பெரிய யோகி மகான்னாலேர்ந்து தலைமுறையாய்க் கையாண்டு வந்து இம்முறையை நான் இருபது வருஷம் தொண்டுசெய்து சேரித்து கொண்டு, சாதுக்கள் அகாடாவை விட்டு பழனிக்கு வந்து அனேக கொடியரோகஸ்தர்களுக்குக் கொடுத்து குணம் செய்ததற்குள்ள நற்சாட்சிகள்பலவுள. பக்தர், பிரபுக்கள் வேண்டுகோளுக்கிணங்கி குறைந்த விலைக்கு வெளியிடப்பட்டிருக்கின்றன பலவித குஷ்ட ரோகங்களுக்கும் இன்னும் அனேகம் ரோகங்களுக்கும் ஏற்பட்ட அனுபானத்துடன் கொடுத்துக் கைகண்டது. பல சீதோஷ்ண ஸ்திதிக்கும் ஆண் பெண் இருபாலரும் எந்த வயதாகயிருந்தாலும் சாப்பிடச்சரியாய் அமைக்கப்பட்டது. அபார சக்தி வாய்ந்தது வாந்தி முதலிய எவ்விதக்கெடுதலும் செய்யாதது.

பாலாம்பிகை டிம்படமார்க்

முதல் நெம்பர் தாம்பர பற்பம்.

தீரும் வியாதிகள்:— கருங்குஷ்டம், செ குஷ்டம், வெண்குஷ்டம், சொரி குஷ்டம், பொரி குஷ்டம், விரி குஷ்டம், எரி குஷ்டம் கபால குஷ்டம், குறை நோய், சில்லட்டைக்கடி, கடி விஷங்கள் 8-ம் நிராம்பல் பெருவயிறு, மகோதரம், நீர்கவசை, குன்மம், அண்டவாய்வு ஆனைக்கால், சூலை, திமிர், மதமதப்பு, உள்ளங்கை, உள்ளங்கால் எரிச்சல், நிரேசம் அழுகி துர்நாற்ற முடையவர்கள், ஆணிப்படன்கள், குழிப்புண், கிரானி, கண்டமாலை பவுத்திரம் இன்னும் அனேக கொடியரோகங்களை வெகு சீக்கிரத்தில் 5. 10, 21 வேளைகளில் குணப்படுத்தும்.

விலை விபரம்	முதல் நெ. தாம்பரபற்பம் அனுபான சூர்ணத்துடன்	21-நாள் விலை ரூ. 30	(தபால் சார்ஜ் பிரத்தியேகம்)
	,, ,, ,, ,,	10-நாள் விலை ரூ. 15	
	2-ம் நெ. ,, ,, ,,	40-நாள் விலை ரூ. 40	

நற்சாட்சியைக் கவனியுங்கள்.— 1. பழனியில் தாம்பர பற்பம் என்னும் பொழுது அதன் ஆசிரியரும் உற்பத்தி கர்த்தாவும் வட இந்தியா இமயகிரிச்சாரல் பெரிய யோகி மகான் மங்களபுரி பாவாஜியின் சீடர் பழனியில் ஆனந்த மெடிகல் ஹால் வைத்திருக்கும் ஸ்ரீமான் சற்குரு மகா தேவ சுவாமிகள் என்ற ஞாபகம் ஜனங்களுக்கு இருக்க வேணுமாக வற்புறுத்தி சிபார்சு செய்வேன். எங்கள் குடும்பங்களிலேயும் எங்கள் பந்துக்கள் குடும்பங்களிலேயும், எங்கள் சிநேகிதர்களின் குடும்பங்களிலேயும், தீராத ரோகங்களை எல்லாம் தீர்த்து வந்தவர் இவரைத் தவிர வேறு ஒருவரையும் காணோம் சுவாமிகள் அயல் நாட்டிலுள்ள வியாதியஸ்தர்களின் மேல் வைத்துள்ள அன்பு மிகவும் பாராட்டத்தக்கதே நண்பர்கள் சுவாமிகளின் மருந்தை கையாள சகல வியாதிகளும் நீங்கி சுகமடைவார்களென்று ஒரு உறுதியாய்ச் சொல்லுகிறேன்.

தாமரைக்குளம், பழனி 8-11-1925 எம். வேலுச்சாமி நாடாழ்வார் மிராஸ்தார்.

2. எனக்குள்ள பெரும் கடினமான குஷ்டரோகத்தைத் தீர்த்தவர் ஸ்வாமிகளே.

மாயப்ப கவுண்டர், விவசாயி, பழனி 14—7—25.

3, எனக்கு 6 வருஷ காலம் உள்ள கபால குஷ்டம் சுவாமிகளின் முதல் நெம்பர் தாம்பர பற்பத்தால் பூரண குணமடைந்தேன்.

பி, வி. சேஷய்யா பழனி தேவஸ்தான மணியம். 14—1—25

4. பழனி டவுன் முன்சிபல் கௌன்சிலரும், ஜவுளி வியாபாரியுமான முத்து அய்யர் சுயமாக தானே மருந்து சாப்பிட்டு சுய அனுபோகத்தின் பேரில் சொல்லுகிறதை கவனியுங்கள்:—

உலகத்தில் வைத்தியர்கள் ஏராளந்தான் உண்டு. எல்லோரும் தான் தாம்பர பற்பம் செய்கிறோம் என்கிறார்கள். வியாதிகளைத் தீர்த்தவர்கள் இல்லை. வியாதிகளைத் தீர்க்க பெரிய அம்சம் பொருந்திய மகான்களின் முறையும் அனுக்கிரகமும் வேண்டும். அவ்வனுகிரகங்கள் நிறைந்த தாம்பர பஸ்பம் என்பதும், பழனியில் தாம்பர பற்பம் என்பதும் ஸ்ரீலஸ்ரீ சற்குரு மகாதேவஸ்வாமிகள் தாம்பர பற்பமேயாகும்.

தாம்பர பற்பம் குஷ்டரோக முதலானதுகளைப்பற்றி உண்மை தெரிய விரும்புவோருக்கு நான சற்குரு மகாதேவ ஸ்வாமிகள் தாம்பர பற்பத்தையே பெரிதும் சிபார்சு செய்வேன்.

எனக்கு சுகத் தாழ்வு ஏற்பட்டு பலரும் என்னைக்கைவிட்டு எனக்குப்பிந்திய காலத்தில் என் சொத்து குடும்ப முதலியவைகள் ஊர்ஜிதத்திலிருந்து வரவேண்டியதை உத்தேசித்து நான் உயில் சாசனம் எழுதிவைத்தபின் நான் இறந்து போகாமல் மீட்டு இந்த சற்சாக்ஷியை உலகத்திற்கு வெளியிடச் செய்தவர் ஸ்ரீலஸ்ரீ சற்குரு மகாதேவ ஸ்வாமிகளேயாகும்

எம். எ. எல. முத்துசாமி அய்யர் முனிசிபல் கவுன்சிலர் அண்டு ஜவுளி வியாபாரம், பழனி, 7-2-28.

5. மகா-ா-ா-ஸ்ரீ மகாகனம் பொருந்திய ஸ்ரீமத் சற்குரு மகா தேவஸ்வாமி அவர்களுக்கு பினங்கு பிரைவில் (Prye) சி. வி. தோமாஸ் எழுதிக் கொண்டது:—

அய்யா, எனக்கு நீங்கள் அனுப்பிய முதல் நெம்பர் தாம்பர பற்பம் ஐந்து நான் சாப்பிட்டேன் எனக்கிருந்த கருமேக நீர் சுண்டி, சகல ரோகங்களும் சுகமாகி விட்டது. இனியும் பாக்கி மருந்து கைவசமிருக்கிறது. கஷ்டப்படுகிறவர்களை சௌக்கியப்படுத்தி ரக்ஷிக்கும்பொருட்டு கடவுள் உங்களை அவதார ரூபமாக இப்பேர்ப்பட்ட ரோகங்களை சவுக்கியப்படுத்துவதற்காகவே ஏற்படுத்தியிருக்கிறார் என உறுதியாய் நம்புகிறேன்.

இப்படிக்கு சி வி தோமாஸ் அன்னகாபுரம் பிறை, பினங்கி 16—2—27

மற்ற ஏராளமான நற்சாட்சிகளை நமது கேட்லாக்கில் பார்க்கவும்

விவரமான கேட்லாக்குக்கு எழுதுங்கள் ஆர்டர் செய்யுங்கள்.

மலாய் நாட்டில் உள்ள நண்பர்கள் மருந்துக்கு ஆர்டர் செய்யும் போது முன் பணம் ரூ. 5 அனுப்ப வேண்டும்

ஸ்ரீமத் சற்குரு மஹாதேவ சுவாமிகள்,

ஆனந்த மெடிகல் ஹால் பழனி மதுரை ஜில்லா, தென்னிந்தியா.

தந்தி விலாசம் "சற்குரு பழனி Tele Addres:—"Sarguru" Palni.

புது சோல் ஏஜண்டு { M E. நாயுடு அவர்கள். டிரஸ்ஸர் 86 டேஞாக்கிடங்கு ரோட்டு. கிளாங்கு— Klang F M S

சமூக சீர்திருத்தமே முன்னணிவேலை.

சாதிக்கொடுமை ஒழியவேண்டும்.

கொழும்பு வீ. அருணாசலம் எழுதுவது

உயர் திரு ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்கள் "குடி அரசு" வாயிலாக மகாத்மா காந்தியின் தற்கால செயலைப் பற்றி எழுதியிருப்பதானது முற்றும் நியாயமாகவே காணப்படுகின்றது. மகாத்மா சாந்தமூர்த்தியாயிருக்கலாம், சத்திய சம்பன்னராயிருக்கலாம், ஜீவகாருண்யக் கடலாயிருக்கலாம். இவற்றை முன்னிட்டு மகாத்மா சொல்வதையெல்லாம நாம் செய்துதான் தீரவேண்டுமென்பதுகமது கடனென்று மகாத்மாவை தீர்க்கதரிசியென்றெண்ணிக்கொண்டோ, அல்லது அவர் சொல்வது போல் கதர் உடுத்தி விட்டால் மாத்திரம் சுய அரசு வந்து விடுமென்றோ எண்ணிக் கொண்டிருப்பது வீண்காலப் போக்கேயாகும். மகாத்மா காந்தியின் உயரிய குணங்கட்காகவும், தேச சேவைக்காகவும், மகாத்மாவைக் கைகூப்பி வணங்கவும் நாம் கடமைப் பட்டிருக்கிறோம். ஆனால், நமது நாட்டின் முன்னேற்றத்திற்குப் பெருந் தடைக் கல்லாயிருக்கும் வருணாசிரமக் கொடுமையை, அஃதாவது மனிதனை மனிதனைக் கருதியாது இழிவுபடுத்திவருங் கொடுமையை ஒழிப்பதற்கு அதிதீவிரமாய் வேலைசெய்யாது, எல்லோரும் கதர் உடுத்துங்கள் சுயராஜ்யம் வந்து விடுமென மகாத்மாவும் அவர்போன்றோரும் சொல்லிவருவது எம் போன்றவர்களால் ஒப்புக்கொள்ள முடியாததாயிருக்கிறது. மகாத்மாவின் கூற்றுப்படி கதர் உடுத்துவதால் சுயராஜ்யம் வந்து விடினும் ஜாதிக்கொடுமை ஒழியாதவரை அஃது நிலையுள்ளதாயிருத்தல் முடியாது. ஆகவே நாட்டின் விடுதலையில் நாட்டமுள்ள ஒவ்வொரு தேசபக்தரும் முதற் கண் சாதி பேதங்களையொழித்துச் சமத்துவத்தை நிலைநாட்டுந்துறையிலிறங்கியே போராடவேண்டும். மகாத்மாவுக்கு சாதிக்கொடுமையை ஒழித்தலை விட கதர் அபிவிருத்தி செய்தலே முக்கியமானதெனத் தோன்றலாம். அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. கதர் அபிவிர்த்தி செய்வதால் அந்நிய நாடு செல்லும் 60 கோடி ரூபாய் தாய் நாட்டிலேயே தங்கி விடுமென்று பலர் சமாதானம்சொல்லமுன்வரலாம். கதர் அபிவிருத்தியால் அந்நியநாடு செல்லும் 60 கோடி தங்கி விடுமென்பது மறுக்கவொண்ணாததே. ஆனால் அப்பணம் எங்கு எவரிடத்திற்றங்கும்? சின்ஹா பிரபு, சீனிவாச சாஸ்திரி, அரங்காச்சாரி போன்ற பலர் பெரிய உத்தியோகங்களைச் செய்து பெரும் பொருளை நாட்டில் தங்கச்செய்து விட்டார்கள் தான். அப்பொருளெங்கு தங்கியிருக்கிறது? ஏழைகளின் குடிசையிலா? அவரவர் வீட்டு இரும்புப் பெட்டியிலா? இஃதன்றி இன்னும் எத்தனையோ பொருள் மடாதிபதியிடந் தங்கியிருக்கின்றன. அவை எவற்றிற்கு உபயோகப்படுகின்றன? ஏழைகளின் வயிற்றுக்கொடுமையைத் தீர்த்துக்கொள்வதற்காகவா? இல்லை. ஏழைகட்குபயோகமின்றித் தங்கும் பொருள் இந்நாட்டிற்றங்கினாற்றானென்ன? அந்நிய நாடு சென்றால் தானென்ன? இரண்டுமின்றி அவற்றைக் கடலிற்கொண்டு கொட்டினாற்றானென்ன? நமது நாட்டினர், பட்டம் பதவி ஆகிய மோகத்தை விடுத்து, சாதி இறுமாப்பைத் தவிர்த்துப் பரோபகாரிகளாய் மாறினால் ஒருவேளை நாட்டிற்றங்கும் பணத்தால் ஏழைகட்குச் சிறிது நலம் விளையலாம்.

ஒரு குடும்பம் தாராளமாய்ச் செலவு செய்வதாயினும் மாதம் ஒன்றுக்கு நூறு ரூபாய் போதுமானது. அங்ஙனம் நூறு வருடத்திற்குக் கணக்கிடினும் ஒரு லக்ஷத்து இருபதாயிரத்திற்கு மேல் போகாது. ஒரு லட்சத்து இருபதாயிரத்திற்கு மேல் பணம் படைத்த சீமான்கள் நமது நாட்டில் எத்தனையோ பேர் இருக்கின்றனர். இவர்களெல்லாந் தங்கட்குப் போதுமானவரை வைத்துக்கொண்டு மீதத்தை ஏழைகட்காக கொடுத்துவிடுகின்றார்களா? இல்லை. இப்பொருளெல்லாம் சட்டசபைத் தேர்தல் சண்டைக்கும், ஏழைகளை அடக்கி அடிமைப்படுத்திவைப்பதற்குந் தானே உபயோகப்படுத்தப்படுகின்றன. இஃதன்றி இலங்கையிலும் 60-லட்சத்துக்கு மேல் பணம் படைத்தார் பலரிருக்கின்றனர். ஆங்கிலேயர்களால் ஆளப்பட வேண்டிய பல தென்னை ரப்பர் தோட்டங்களை வாங்கிக் கட்டி ஆண்டு அந்நிய நாடு செல்லும் ஓரளவு பணத்தைச் செல்லவொட்டாது தடுத்தே வைத்திருக்கின்றனர். இன்னும் பலர் வக்கீலாய் நின்றும், டாக்டர்களாயிருந்துங் கொள்ளையிட்டு ஏராளமான பொருளைத் தங்கச் செய்தேயிருக்கின்றனர். ஆனால் இப்பொருளெல்லாம் எங்கு தங்கியிருக்கின்றன? அன்றன்று வயிற்றின் கொடுமை தாங்காது வருந்தியலையும் ஏழைகளின் வயிற்றிலா? இல்லை. ஆங்கிலேயர்களின் பாங்கியில் வட்டிக்குத் தங்கியிருக்கின்றன. இவற்றால் ஏழை உலகத்திற்காகும் பயனென்னை?

நாட்டிற் பணந்தங்கும் விஷயம் இங்ஙனமிருக்க கதர் கதரெனக் கூக்குரல் போடுகின்றவர்களும், 60 கோடி ரூபாயை நாட்டிற்றங்கச் செய்து விடப் போவதாகவும், அதனால் ஏழைகட்குப்பிழைப்பு ஏற்பட்டு விடுமென்றுந்தான் வியாக்கியானஞ் செய்கிறார்கள். அஃதோர் புறமிருக்கட்டும். மகாத்துமா காந்தி போன்றார் யாரேனும் ஓர் மகாநாடு கூட்டி, அகில இந்தியா ஆதி திராவிடர்களையும் வேறு பல ஒடுக்கப்பட்டார்களையும் அழைத்து, "அந்நிய நாடு செல்லும் 60 கோடியைத் தடுத்து உங்கள் எல்லாருக்கும் பிழைப்பு ஏற்படுத்தவெண்ணியுள்ளோம். ஆனால் தலைமுறை தலைமுறைக்கும் நீங்கள் தாழ்த்தப்பட்டவர்களாகவே யிருந்து வரவேண்டும் அல்லது உயர் சாதி இந்துக்களெனப்படுபவர்கட்குரிய எல்லா உரிமையும் பெற்றுக் கொண்டு, இப்பொழுதிருந்து வருவது போல் ஏழ்மை நிலையிலேயே இருந்து வரவேண்டும். இவ்விரண்டில் உங்கட்கு எது விருப்பம்" எனக்கேட்கட்டும். தாழ்த்தப்பட்டவர்கள் என்ன பதிலிறுக்கிறார்களெனப்பார்ப்போம். அதன் பின் மகாத்துமா காந்தி போன்றாரின் முன்னணி வேலை கதர் அபிவிருத்திசெய்தலா, மனிதனை மனிதன் தாழ்த்தி வருங் கொடுமையை ஒழிக்கவா என்பதைத் தீர்மானித்துக்கொள்ளலாம் நிற்க,

மகாத்துமா காந்தி கதர் அபிவிர்த்தியின் பொருட்டு எடுத்துக்கொள்ளும் முயற்சியில் நூற்றிலொரு பங்கேனும் சாதிக் கொடுமையை ஒழிக்கப் பொருட்டு எடுத்துக் கொண்டிருப்பாராயின், இதுகாலை நமது நாடு எத்துணையோ தூரம் முன்னேறிச் சென்றிருக்கும். மகாத்துமாவோ கதரைப்பரவச் செய்தலொன்று தான் முதற் கடனென்றெண்ணியிருக்கின்றனர். நாமோ சாதிக்கொடுமையை ஒழித்து சமத்துவத்தை நிலை நாட்ட வேண்டியதே முதற் கடனென்றெண்ணியுள்ளோம். மகாத்துமா கதர்ப்பணியே போன்று சமத்துவப் பணியிலும் அதி தீவிரமாய் ஈடுபடுவாராயின் நாம் அடையும் மகிழ்ச்சி எல்லையற்றதாயிருக்கும். ஆனால் கர்ம வருணாசிரம ஆச்சாரியார்கள் மகாத்துமாவுக்கு மந்திரியாயிருக்கின்றவரை நமது கோரிக்கை நிறைவேறுமென்பது முடியாததொன்று. உண்மையாகவே மகாத்துமா காந்தியானவர் கதர்ப்பணியே போன்றசமத்துவப் பணியிலும் அதிதீவிரமாய்ப் பிரவேசித்துவிடின் திரு.இராஜகோபாலாச்சாரி போன்றவர்கள் மகாத்துமாவுக்குமந்திரியாயிருத்தலென்பது கனவிலுங் காண்டற்குரியதன்று. அதுகாலை ஆச்சாரி போன்றவர்கள், மகாத்துமா மத விஷயத்தில் தலையிட்டு விட்டது பெரிய அக்கிரமமென்றும், மகாத்துமாவுக்கு மண்டையில் மூளையில்லை யென்றுங் கூறிவிட்டு ஓடியே தீரவேண்டியதாயிருக்கும். ஆகவே பார்ப்பன ஆச்சாரிமார்கள் மகாத்துமாசமத்துவப் பணியில் ஈடுபடாதிருக்க வேண்டிய சூழ்ச்சி செய்து கொண்டே யிருப்பர். இதைப் பற்றித் திருமிகு. இராமசாமி நாயக்கர் அவர்களும் "குடி அரசு" வாயிலான் ஒரு வாறு குறிப்பிட்டிருக்கின்றனர். எனினும்,

பத்திரிகையிற் குறிப்பிட்டு விட்டு வாளாவிருத்தலிற் பயனில்லை. தமிழ் நாட்டுப் பார்ப்பனரல்லாதார் தலைவராய ஐவர் மகாத்

அவியல்.

11-ம் பாகம்

கைவல்ய சாமியார் எழுதுவது.

மனிதர்கள் தங்களுக்கு இன்றியமையாதது என்று சொல்லிக்கொள்ளுகிற அவசியமான பொருள்கள் இல்லாமல் ஒருநாள்கூட காலங்கழிக்க முடியாது என்றுநினைக்கும் தற்காலத்தில், அந்த அவசியமான பொருள்களும் நாளுக்குநாள் அளவில்லாமல் விர்த்தியாகிக்கொண்டே போவதை எட்டிப்பிடிக்கவே ஓடிச்செல்லும் தற்காலத்தில், அப்பொருளைத் தன் தேவைக்குக் கொண்டுவரவே கல்விவேண்டும் கைத்தொழிலின் அறிவு வேண்டும் கப்பலேறிப் போகவேண்டுமென்னும் தற்காலத்தில், உண்மையையும் தர்மத்தையும் மறைத்து வார்த்தை சொல்லுதல் ஆண்மையற்ற சித்த பலக் குறைவின் அயோக்கியத்தனமென்று கருதும் தற்காலத்தில், மனதிலும் புத்தியிலும் உயிரிலும் உண்மையான மனிதத்தன்மையுடையவர்கள் நம்மில் சுருக்கிவிட்டார்களென்று கருதும் தற்காலத்தில், அதர்மத்தால் மனிதன் சிறிது மேலேறி அதனால் சில நலன்கள் கண்டு அதனால் மற்றவர்கள் துன்புற்று அதனால் பின்பு தானே வேருடன் கெட்டுப்போனதை நம் தேசத்தில் பிரத்தியக்ஷமாக நாம்பார்க்கும் தற்காலத்தில், தேசபக்தியாகிய விளக்கு நம்முன்னே எரியத் தொடங்கிய காலத்தில், நம்முன்னே இருக்கும் அதிக உத்தம அம்சங்கள் ஜோதிபெற்றுத் திகழும் என்ற உயர்ந்த ஆசைகள் கொண்டிருக்கும் தற்காலத்தில், பல நூற்றாண்டுகளாக நம்மிடையேசேர்ந்த பிழைக்கூட்டம் இருள்மூலையைவிட்டோடிப்போமென்றும் நம்முடைய ஆண்மையை நசுக்கிப் பழிக்கிடமாக்கிய குரூரமான ஜாதி ஆசாரங்களினின்றும் பரஸ்பர அன்பினால் விடுபட்டு முடிசூக்கி நிற்போமென்று நம் நாட்டு உத்தமர்கள் எண்ணியிருக்கும் தற்காலத்தில், ஜனக்கட்டிலும் ராஜ்ஜியத்திலுமுள்ள குற்றத்தைப் பொது ஜனங்கள் உண்மை விளக்கால் சோதித்துப் பார்த்து அதனால் கிடைக்கும் சக்தியும் விடுதலையும்பயன்பட்டு நம்பிக்கையையும் தைரியத்தையும் உண்டாக்கி தானும் வளர்ந்து பிறரும் வளர தீரத்துடன் 'குடியரசு' கூப்பிடும் தற்காலத்தில், நாம் தர்ம விதிகளையும் சத்தியத்தையும்விட்டு நமக்குத் தன்னாட்சியில்பயிற்சி வரவில்லை என்னும் இழிவு சொல்லைத்தாங்கி நம் நெற்றிமீது பழிச்சூடு விழுந்திருப்பதைத் துலக்க நாய்க்கர் ஊர் ஊராய்த் திரியும் தற்காலத்தில், ஆதித்திராவிடப் பிள்ளைகளை பள்ளியில் சேர்த்த மாட்டோம் என்பதின் அறியாமைஎன்ன! இது, நம்மவரைநாமே இகழ்ந்து அவர்களின் அறிவைக் கெடுத்து அவர்களை உலக

தியாகிடம் தூது சென்று மகாத்மாவைக் காப் பணியே போன்று சமத்துவப்பணியிலும் ஈடுபடுமாறு வற்புறுத்த வேண்டும். அதனால் நன்மை விளைந்தாலும் சரி தின்மை விளைந்தாலுஞ்சரி. இதனால் தாழ்த்தப்பட்ட உலகம் விழித்தெழுமென்பது மட்டும் நிச்சயம்.

இக்கட்டுரையைப் படிக்கும் அன்பர்கள் [illegible] கதர்ப்பற்றின் மறை எண்ணற்க [illegible] இயக்கம் தோன்றிய நாள்தொட்டே [illegible] புணிந்து வருகிறோம். ஆனால் கதரை [illegible] சமத்துவத்தை நீல நாட்டுதலே [illegible] வேண் டுமென்பது நமதபிப்பிராயம்.

மிகழ அதனால் நம்தேசத்திற்குப்பழியும் நமக்குப் பாவமும் வந்துசேர அதை மறைக்க பத்திரிகையிலும் மேடையிலும் வஞ்சனையால்பேசிவந்த பாவமும் கூடி ராஜ்ஜியத்தையும் குடும்பத்தையும் குட்டிச்சுவராக்கும் கொடுமை என்பதை உணருங்கள்.

ஏழை அழுதகண்ணீர் கூரிய வாளை ஒக்கும். உயர்குடியென்னும் பிறப்பும் செல்வச்செருக்குமுள்ள நம்முன்னோர்கள் நாட்டின் ஏழை ஜனங்களை காலால் மிதித்து வருத்தினார்கள். அவ்வேழைகளும் இந்த கொடுமைக்கு வெகுநாளாக உள்பட்டு ஆதரவற்று, வலியற்று, ஒளி மழுங்கி தாம் மானிட ஜென்மமென்பதுகூட மறந்துவிட்டார்கள். நம்முன்னோர்களின் ஆணவத்தால் பல நூற்றாண்டு நிர்பந்தப்படுத்தி அவர்களை மிருகப் பிறவியர்களாக செய்துவிட்ட கொடுமை நம்மைத் தலைஎடுக்காமல் செய்வதைப் பார்த்து இனியும் நாம் அந்த கொடுமைக்கு என் ஆளாகவேண்டும். அவர்களைத் தீண்டுவதால் நமது பிள்ளைகளுக்கு பாவமோ உலக உயர்வின் தடையோ வந்துவிடுமென்று எண்ணுவது முட்டாள்தனமேயொழிய வேறு என்ன! ஆதி திராவிடப் பிள்ளைகளுடன் சேரும் பிள்ளைகளுக்கு பவிசும் பாக்கியமும் போய்விடுகிறதென்று நினைக்கிறீர்களா? ஆதிதிராவிடப் பிள்ளைகளுடன் கூடி விளையாடும் பிள்ளைகளுக்குத்தானே ராஜ்யதந்திர மிருக்கிறது, சம்பத்தால் சாதிக்கத்தக்கதெல்லா மிருக்கிறது. பிரபுத்துவத்தால் பெறத்தக்கதெல்லா மிருக்கிறது, இந்திரியங்களால் அனுபவிக்கக் கூடியதெல்லாமிருக்கிறது. இதற்கப்பாலும் ஒன்றுமவதாலது இந்திரிய சுகபோகங்கள் உளவாகில் அவற்றையும் பெறவேண்டுமென ஆவலுமிருக்கிறது. அந்தப் பிள்ளைகள்தானே நம்மையாளும் அதிகாரிகள். ஆதி திராவிடர்களின் பாலைக்குடித்து வளரும் பிள்ளைகள் நமக்கு எஜமான் ஆவதும், நம் பிள்ளைகளுடன் படித்தால் நம் பாக்கியம் கெட்டுப்போவதும் என்ன ஆச்சரியம். அருள், தூய்மை, சர்வவியாபகத்துவம், சர்வஜ்ஞத்துவம் முதலிய குணங்கள் ஒவ்வோர் ஆன்மாவிலும் மறைந்திருக்கின்றன. இக்கூரிய கம்பீரமான பாவனைதான் நம் பாரத வர்ஷத்தில் போதிக்கப்பட்ட சிறந்த தத்துவம்.

நம்முடைய நடுவீட்டில பிணம் எடுப்பாரற்று நாற்றமெடுக்கிறது. ஊரிலுள்ள கல்லறைக்கெல்லாம் புஷ்பம்போட்டு நந்தவனம் வைக்கப் போகிறவர்களும் காங்கிரஸ் பெயரைச்சொல்லிக் காரியத்தைப்பார்க்கப் போகிறவர்களும், சென்னைபிரிக்கா வெள்ளையருக்கு கருப்புசாயம் போடப் போயிருக்கிறோம் எங்களைப் போன்ற ஒருவர் அங்கு சாயம் கலக்க எப்பொழுது மிருக்கவேண்டு மென்போரும், மந்திரிபதவியை காங்கிரஸ் ஏற்கக்கொள்ள காங்கிரஸ் கூட்டத்திற்கு வியாக்யானம் கண்டுபிடிப்பவர்களும், ஐயா நீங்கள் உங்கள் கட்சிக் கொள்கைகளுக்கும் நீங்கள் முன் பேசினதற்கும் இப்பொழுது நடப்பதற்கும் வித்தியாசமிருக்கிறதேஎன்று கேட்டால் அது பாயிண்டு வேறு இது பாயிண்டு வேறு அது எங்கள் கட்சிக்கொள்கை இது என்னுடைய சொந்த அபிப்பிராயம் என்று மானமில்லாமல் சொல்லித் தங்கள் லாபத்தை திருத்திக் கொள்ளுவோரும், பலபேர் சேர்ந்து ஒன்றுகூடி ஒன்றை அழிக்கவோ உண்டுபண்ணவோ ஏற்படுத்திக்கொண்ட கொள்கை கட்சிக் கொள்கை. அதை அனுசரிப்பவன் அந்தக் கட்சியைச்சேர்ந்தவன். கட்சியைப் பொறுத்தவரையிலும் இவன் கொள்கை எல்லாம் கட்சியைப் பொறுத்ததே. அப்படியிருக்க கட்சிக்கொள்கை எதுவாயிருந்தாலும் அது வேறு, இது என் சொந்த அபிப்பிராயம் என்று சொல்லுவதானது பின்னால் ஒன்றைக் கருதி ஏமாற்றவோ திருடவோ மோசஞ்செய்யவோதானே பேசுகிறீர்களென்று யாராவது கேட்டால் காங்கிரசு போச்சு சுயராஜ்ஜியம்

தடைபட்டது, பாப்பானையே திட்டுகிறான்என்று சொல்லி சொன்னவர்களை குற்றம்சொல்ல கூலி கொடுத்து, பதவிக்குப் பக்க பலமாக நிற்பதாகப் பாசாங்கு செய்து ஆள் சேர்ப்பவர்களும், அன்பும், கருணையும், ஆணும் பெண்ணும், இன்ப வாழ்வும் காதல் நட்பும், கடவுளும் கடமையும், ஒழுக்கமும், அன்பும் ஆசாரமும், ஜீவனும் சிவன் பெருமையும் என்பவைகளை பிரசங்கிக்க மேடை மேடையாகப் போகிறவர்களும் நம் நாட்டில் பெருகிவிட்டதே ஒழிய ஆதிதிராவிடப் பிள்ளைகளைபள்ளியில் சேர்க்க மாட்டேனென்கிற பாவிகளை எதிர்த்து தொண்டாற்றுகிறவர்களைக் காணோம்.

மனிதனுடைய நியாயத்திற்கு காரணமாயிருப்பது ஒன்று கடவுள் விதி மற்றொன்று ராஜ விதி. கடவுள் விதியைப்பற்றி வேதசாஸ்திரங்கள் சொல்லுகிறது. ராஜ விதி சட்டப்புஸ்தகங்களிலிருக்கின்றன. இந்த இரண்டு விதிகளிலும் ஆதிதிராவிடப்பிள்ளைகளை பள்ளியில் சேர்த்துக்கொள்ளப்படாதென்று சொல்லவில்லை. சேர்த்துக்கொள்ளப்படாதென்று சொல்லவும் முடியாது. அப்படியிருக்க ஒரு ஜாதி இன்னொரு ஜாதியின் கல்வியைத்தடுக்கிறது என்! என்பதற்கு பதிலும் வேண்டும். ராஜ அதிகாரத்தைப்பெற்ற அதிகாரிகள் கைக்கூலி வாங்குதல், ஒருவர் பேச்சைக் கேட்டு ஓரம் சொல்லுதல், எந்த அரசாங்க சட்டத்திலுமில்லை என்றாலும் கைக்கூலி வாங்குவதும் ஒருவர் வார்த்தையைக்கேட்டு ஓரம்சொல்லுதலும் காண்கிறோம். என்! அவர்கள் சந்தயத்தைவிட்ட சுய நலத்தை உத்தேசித்து. அதுபோல எந்த வேத சாஸ்திரங்களிலும் ஒருவரின் கல்வியைக் கெடுக்கவோ தடுக்கவோ சொல்லவில்லை. ஆனால் நம் நாட்டிலிருக்கின்றன. என்? கூட்டமாய்ச் சேர்ந்த தங்கள் ஜாதியின் திறமையை வளர்ப்பதாகிய கல் நெஞ்ச ஸம்பிரதாயமேயாம். அந்த தெய்வ விரோதமான பாவத்தின் குருட்டுக்கொள்கையை தைரியத்துடன் எடுத்துப்பேசுவோரை பண்டுகால முதற்கொண்டே அதிகாரிகள் தொளடிப்பதும குருக்கள்கள் விரோதிப்பதும சகஜமாக இருந்தது. ஜாதியின் குருட்டு மூட நம்பிக்கையின் கொடுமை வாயளவிலேனும் அடங்கி ஜீவ சக்தியில் நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தைரியத்தினாலேதான, நீங்கள் சாஸ்திரத்திற்கும் சட்டத்திற்கும் சம்மதமில்லாத பாவத்தை ஏன் செய்கிறீர்களென்று குடி அரசு கேட்கிறது.

நாங்கள் குழந்தைப் பிராய முதலாகவே பழகிவிட்டபடியால் இது எங்களுக்கு பிடிப்பதில்லை. நம் தேசாச்சாரப்பழக்கத்திலுமில்லை. ஆனதால் ஆதிதிராவிட பிள்ளைகளுடன் எங்கள் பிள்ளைகள்படிக்கமுடியாது என்கிறவர்களுக்கு 'குடியரசு' பதில் சொல்லவேண்டும். வேத சாஸ்திரம் ராஜ சட்டம் இவற்றைவிட உலகு வழக்கு பெரிதாக வைத்துக்கொண்டாலும் அவசியம நேரிடுகிறபொழுது நமது ஜாதீய நடை உடை பாவனைகளையும பழக்கங்களையும் மாற்றிக்கொள்ளவேண்டுமென்பதும், இதர ஜன சமூகங்களிடமிருந்து நாம் அநேக வழக்கங்களை கற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறதென்பதும் தெரிந்துகொள்ளவேண்டியவை நாம்எந்த அவசியத்திற்கும் நம்வழக்கங்களை மாற்றிக்கொண்டுதானே வருகிறோம். ஐம்பது வருடத்திற்கு முன்னிருந்த பழக்கவழக்கங்கள் நம் நாட்டில் இப்பொழுது இருக்கிறதா? ஆண்பெண்களைப்பார்த்து முன் ஜாதியைக்குறிப்பிடலாம். இப்பொழுது நடையுடை பாவனையில் எல்லாம் ஒரே ஜாதியாகத்தான் இருக்கிறது. ஆசாரியர்களும சாஸ்திரிகளும் அய்யர்களுமல்லவா நம் நாட்டுவிதிகர்த்தாக்கள். அவர்கள்மேனாடு போவதும் வருவதும் உங்களுக்கு உபதேசிப்ப

இதன் தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க

மதப்புரட்டு.

ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் குற்றாலத்தில் செய்த உபந்யாசத்தின் தொடர்ச்சி

அரசியலின் பெயரால் அரசியல்காரர்கள் தேசியக்காரர்கள் என்போர்கள் தங்கள் சுயநலத்திற்கு மக்களை எவ்வளவுதூரம் ஏமாற்றி பாழ்படுத்தி வருகிறார்கள் என்று சொல்லி வந்தேன். அதைவிடக் கொஞ்சமாவது குறைந்ததல்ல இந்த புரோகிதர்கள் அல்லது பார்ப்பனர்கள் என்கிற ஒரு கூட்டத்தார் மதத்தின் பேரால் நம்மை ஏமாற்றி நமது ஒற்றுமையைக் குலைத்து நாம் கஷ்டப்பட்டு சம்பாதித்த நமது பொருளையும் கொள்ளை கொண்டு நமது நாட்டையும் சமூகத்தையும் பாழாக்கி நம்மை சுயமரியாதை அற்ற மனிதர்களாக நடைப்பிணமாய் வாழும்படி செய்து வருவது. இதன் இரகசியத்தை நாம் கொஞ்சமும் உணராமல் இம்மாதிரியான வஞ்சகச்செயலுக்கும் நாமே உதவியாயும் இருந்து நீடூழிகாலம் நம்மையும் நமது பின் சந்ததியையும் நிரந்தர அடிமையாகவே வேண்டியதான ஆதாரங்களையும் சிருஷ்டித்து வருகிறோம். இதை விளக்குகிற போது உங்கள் மனம் ஒரு சமயம் பதைத்தாலும் பதைக்கும். தயவுசெய்து கொஞ்சம் பொறுமையோடு கவனித்து கேட்டபிறகு உங்கள் பகுத்தறிவையும் நடுநிலைமையில் இருந்து உபயோகப்படுத்தி பார்ப்பீர்களானால் அதன் உண்மை அதாவது நான் சொல்லுவது சரியா தப்பா என்பது உங்களுக்கு விளங்காமல் போகாது. அல்லாமலும் "நான் சொல்லுவதை நீங்கள் நம்புங்கள், நான் சொல்லுவது கடவுள் வாக்கு, நம்பாவிட்டால் நரகம்வரும், நாஸ்திகர்கள் ஆய்விடுவீர்கள்" என்ற வேதம் சாஸ்திரம் புராணம்போல நான் உங்களை அடக்குமுறைக்குள் ஆளாக்கவில்லை. நான் சொல்வது உங்களுடைய அறிவு, ஆராய்ச்சி, புத்தி, அநுபவம் இதுகளுக்கு ஒத்துவராவிட்டால் தள்ளிவிடுங்கள். ஒத்துவந்தால் காரியத்தில் கொஞ்சமாவது செய்ய முற்படுங்கள். உங்கள் சகோதரர்களுக்கும் இதைச்சொல்லி அவர்களையும் ஈடேற்றுங்கள் என்றுதான் நான் சொல்லுகிறேன். இப்படிச் சொல்லுவதனால் எனக்கு இதில் ஒரு சுயநல பலனும் இல்லை என்பதையும் அறியுங்கள். நான் எந்த மதக்காரனுக்காவது ஏஜண்டு அல்ல, அல்லது நானும் எந்த மதக்காரனுக்காவது அடிமையும் அல்ல. அன்பு, அறிவு என்கிற இரண்டு தத்துவத்திற்கு மாத்திரம் ஆட்பட்டவன். ஆதலால் எனக்குப் பட்டதை உங்கள்முன் சொல்வதில் எனக்கு ஒரு கடமையும், ஆசையும், மகிழ்ச்சியும் இருப்பதால் சொல்லுகிறேன். மற்றபடி அதைப்பற்றிய உங்கள் கடமைகளை உங்கள் சுதந்திரத்திற்கே அதாவது உங்கள் பகுத்தறிவுக்கே விட்டுவிடுகிறேன்.

மதம் என்பது நாட்டிற்கோ ஒரு சமூகத்திற்கோ ஒரு தனி மனிதனுக்கோ எதற்காக இருக்கவேண்டியது? ஒரு தேசத்தையோ சமூகத்தையோ கட்டுப்படுத்தி ஒற்றுமைப்படுத்துவதற்காகவா, பிரித்து வைப்பதற்காகவா? அது ஒரு மனிதனின் மனச்சாக்ஷிக்கு கட்டுப்பட்டதா? அல்லது ஒரு மனிதனின் மனச்சாக்ஷியை கட்டுப்படுத்தக் கூடியதா? மனிதனுக்காக மதமா அல்லது மதத்துக்காக மனிதனா? என்பவைகளை தயவுசெய்து யோசித்துப் பாருங்கள்

இந்த முறையில் நமது மதம் என்பதின் யோக்கியதையை கொஞ்சம் யோசித்து பாருங்கள். முதலாவது நமது மதமாகிய இந்து மதம் என்பது என்ன என்பது இங்குள்ள எத்தனை பேருக்கு தெரியும்? இந்து மதஸ்தர்கள் என்போர்களில் எத்தனை பேர்கள் அதன் தத்துவத்தை அறிந்திருப்பார்கள்? இந்து மதம் என்பதாக ஒரு மதம் உண்டு என்று எத்தனை பேர் ஒப்புக் கொள்ளுகிறார்கள்?

முதலாவது இந்து என்பது எந்தபாஷை வார்த்தை? உலகத்தில் உள்ள எந்த பாஷையிலாவது இந்து என்கிற ஒரு வார்த்தை இருக்கிறதாக யாராவது சொல்லக் கூடுமா? மது நாட்டிற்கு இந்த வார்த்தை எப்பொழுது வந்தது என்று பார்ப்பதானால், நம்முடைய தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஆகட்டும், அல்லது சங்ககால பழய தமிழ் ஆதாரங்களில் ஆகட்டும், அல்லது ஆரிய பாஷை ஆரிய நாகரிக பழக்கவழக்கங்களைக் கொண்ட வேதம், சாஸ்திரம், ஆகமம் ஸ்ருதி, ஸ்மிருதி, புராணம், சரித்திரம், கதை முதலியவைகளிலாவது இந்து அல்லது இந்துமதம் என்கிற வார்த்தை இருக்கிறதா? அல்லது ஆழ்வாராதிகள் நாயன்மார்கள் என்ற பெரியோர்களது பாடல்களிலாவது சரித்திரங்களிலாவது இந்த வார்த்தைகாணப்படுகிறதா? அல்லது சித்தர்கள், முனிவர்கள், ரிஷிகள் என்று சொல்லப்பட்டவர்களாவது இம்மாதிரி வார்த்தை உச்சரித்ததாகவோ வழங்கினதாகவோ எங்காவது காணக்கிடக்கின்றதா?

மதம் என்பதற்கு நாம் உத்தேசிக்கும் பொருள் தான் என்ன? வேறு பார்த்தால் ஆராய்ச்சிக்காரர்கள், மதம் என்பது கொள்கை என்று சொல்லுகிறார்கள். அப்படியே வைத்துக் கொள்வதானாலும் இந்து மதம் என்பதற்கு என்ன பொருள்?

இந்து கொள்கை என்று வைத்துக் கொள்ளலாம் என்றால்,

இந்து என்பதற்கு பொருள் என்ன? இந்து மதம் என்பதைத் தவிர மற்ற மதங்கள் என்பவைகள் இம்மாதிரி இல்லாமல், மதம் என்பதற்கு முன்னால் ஒரு தனிப்பட்ட மனிதனின் பெயரைவைத்து, பின்னால் மதம் என்பதைக் கூட்டி, கிருஸ்து மதம், மகமதிய மதம், புத்த மதம், இராமனுஜமதம், சங்கராச்சாரிய மதம் என்பது போல சொல்லப்படுகிறது. இம் முறையில் இந்து மதம் என்பது எந்த ஆசாமியை உடையது? யாருடைய கொள்கை என்று பெயர் கொண்டது? ஒன்றுமே இல்லாமல் வெறும் உச்சரிப்பைத் தவிர யாதொரு பொருளுமற்றதான சப்தம் கொண்ட வார்த்தையை நமது மதத்திற்கு பெயராக வைத்துக் கொண்டிருக்கிறோமா இல்லையா என்பதை யோசித்துப் பாருங்கள்.

இரண்டாவது, மற்ற மதங்களைப்போல இந்து மதத்திற்கு யார் கர்த்தா? அதற்கு என்ன வயசு? அதற்கு என்ன கொள்கை? இதற்கு என்ன ஆதாரம் என்பவைகளையாவது யோசித்துப்பாருங்கள். "இந்துமதம் என்பது வேதமதம். வேதம் என்பது கடவுளால் சொல்லப்பட்டது" என்று சிலர் சொல்லுவது உண்டு. அந்த ஆபாசத்தையும் கொஞ்சம் கவனித்துப்பாருங்கள். கடவுளால் சொல்லப்பட்ட வேதமானால் உலகத்தில் உள்ளவர்கள் எல்லோருக்கும் ஒரே வேதமாய் இருக்கக் கூடுமே தவிர ஒருவர் ஒப்புக்கொள்ளவும், மற்றொருவர் மறுக்கவும், மற்றொருவருக்கு தென்படக்கூடாததாயும், ஒரு எல்லைக்குள்ளாகவே அடங்கக்கூடியதாகவும் இருக்க முடியுமா? கடவுளால் சொல்லப்பட்டதானால், அது ஒரு பாஷையில்தானா சொல்லப்பட்டிருக்கவேண்டும்? நமக்கு சொல்லப்பட்ட வேதமானால் நம்முடைய பாஷையில் சொல்லப்பட்டிருக்காதா? வேத பாஷைக்கும் நமக்கும் ஏதாவது சம்மந்தமுண்டா? அன்றியும் நமக்காக கடவுளால் சொல்லப்பட்டதாயிருந்தால் நாம் அதைக் கேட்கவும், பார்க்கவும், படிக்கவும், அறியவும் கூடாததாயிருக்கமுடியுமா? அது ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு வேதம் என்பதாக கணக்குத் தகராறுக்கு கட்டுப்பட்டதாக இருக்குமா? தவிர 'பிடித்தவனுக்கு எல்லாம் பெண்டாட்டி' என்பதுபோல் அதற்கு ஆளுக்கு ஒரு விதமாக அவரவர் இஷ்டப்படி வியாக்கியானம் செய்யவும், ஒவ்வொரு வியாக்கியானத்திற்கு ஒரு கக்ஷி சேர்க்கவும் தக்கதாகவிருக்கக்கூடுமா? ஆகிய இதுபோன்ற அநேக விஷயங்களை யோசித்தால் வேதம் என்று ஒன்று உண்டா? உண்டாயிருந்தாலும் அது உண்மையானதா? உண்மையானாலும் நம்மை அது கட்டுப்படுத்தத்தக்கதா என்பவைகளை சற்று யோசியுங்கள். தவிர இம்மாதிரியான மதவேத கடவுளைப்பற்றியும் இதுபோலவே யோசியுங்கள்.

உலகத்திற்கு எத்தனை கடவுள்? அதில் உள்ள எத்தனையோ மதங்களில் ஒரு மதமாகிய இந்து மதம் என்பதற்கு எத்தனை தெய்வங்கள்! அவைகளுக்கு எத்தனை கடவுள்கள்! இந்த கடவுள்களை ஆராதிக்கிற வணங்குகிற மக்களுக்கு எத்தனை கக்ஷிகள். ஒவ்வொரு கடவுள்களின் குறிகளுக்கு எத்தனை அடையாளங்கள்! அவைகளுக்காக எத்தனை சண்டைகள். இந்தக் கடவுள்களுக்கு எத்தனை கோயில்கள்! எத்தனை ஆகாரங்கள்! எத்தனை கலியாணங்கள்! எத்தனை பெண்டுபிள்ளைகள்! எத்தனை அக்கிரமமான நடவடிக்கைகள் என்பது போன்றதையும் கவனியுங்கள். இந்த கடவுள்களின் பக்தர்களுக்குள் எத்தனை வித்தியாசங்கள்! எத்தனை ஜாதிகள்! எத்தனை உயர்வு தாழ்வுகள்! இவைகளில் எல்லாம் ஒரே ஒரு வகுப்பார் மாத்திரம், அதுவும் விரல் விட்டு எண்ணி விடத்தக்க வெகு சிலர் மாத்திரம் எல்லாவற்றிற்கும் பெரியவர்கள், உயர்ந்தவர்கள், உரிமையுள்ளவர் என்கிற நியாயம் ஏன்?

கடவுள் எல்லோருக்கும் பொதுவானவர், அவர் எங்கும் உள்ளவர், என்கிற தத்துவம் நம்முடைய மதத்து கடவுளுக்கும் உண்டானால், நாம் கடவுள் கிட்டப் போகக்கூடாது, மற்றவர்கள் கோயில்களுக்குள் வரக

கூடாது, மற்றொருவர் மாத்திரம் தான் கடவுளைத் தொடலாம், கழுவலாம், வேஷ்டி துணி கட்டலாம் என்கிற கொடுமைகள் அதற்கு ஏற்படுத்த முடியுமா?

நாம் இந்த மதத்தை ஒப்புக்கொண்டு, அதில் கண்ட சாமிகளையும் ஏற்றுக்கொண்டு, அதற்காக கோயிலும் கட்டி, சொத்தும் விட்டு, நாம் வணங்கவும் தினம் போய்வருவதினால் நமக்கு ஏற்படுகிற பலன் என்ன என்பதைப்பற்றி சற்று யோசித்துப்பாருங்கள்.

ஒரு லக்ஷம் ஐந்து லக்ஷம், பத்து லக்ஷம், ரூபாய்கள் என்பதாக செலவு செய்து கோயில் கட்டி, அந்தக்கோயில் 100 வருஷம், 1000 வருஷம், 10000 வருஷம், 100000 வருஷம் என்கிற காலம் நிலைத்திருக்கச் செய்வதில் என்ன நிலைத்திருக்கச் செய்கிறோம் என்பதை சற்று பொறுமையாய் யோசித்துப்பாருங்கள் "இந்த கோயிலில் உள்ள சுவாமியிடம் போகக்கூடாத ஒரு நீச்சன் நான், அந்த சாமிக்கு நேரே பூஜை செய்யக்கூடாத ஒரு இழிந்தவன் நான். என்னைவிட ஒரு பெரிய ஜாதி இருக்கிறது. அவர்களைவிட தாழ்ந்த ஜாதியாகிய நான் நிற்பதற்கு இந்த இடம்" என்று பலபல விதமாக நம்மை நாமே இழிவுபடுத்திப்பிரித்து, அதைஒப்புக்கொண்டு" அந்தக் கல்லும் கோயிலும் கோயிலுக்குள் இருக்கும் சுவாமியும் உள்ளவரை என்னுடைய இழிவும் நீச்சத்தனமும் தாழ்வும் நிலைத்திருக்கத்தக்கது, இதற்கு என் பின் சந்ததிகளும் கட்டுப்பட்டிருக்க வேண்டும் இத்தனை லட்சம் செலவு செய்து கோவில் கட்டி கும்பாபிஷேகம் செய்ததுமாத்திரமன்றி என்னை விட இன்னொரு ஜாதியான் உயர்ந்தவன் என்பதை நிலை நிறுத்தவும், அவன் பசியினால் சாகாமல் இருக்கவும், அவனுக்கு உபயோகப் படும்படியாக அந்தசாமியின் பெயரால் இத்தனை லட்சம் ரூபாய் சொத்துக்களை எழுதிவைக்கிறேன், இதை அவன் கூட்டத்தார் மாத்திரம் சாப்பிட்டுக்கொண்டு, பிள்ளை பிள்ளை தலைமுறையாய் கற்பகோடி காலத்திற்கு கல்லும் காவேரியும் புல்லும் பூண்டும் உள்ளவரைக்கும் மேல ஜாதியாயிருந்து வாழவேண்டியது" என்று செய்வதாகிறதேயல்லாமல் வேறு என்ன என்பதையும் கவனித்துப் பாருங்கள். இது தவிர இந்த மாதிரி கோயில்களுக்கு மற்றவர்களையும் எவ்வளவு செலவுகள் செய்யச்சொல்லுகிறோம். அதனால் மக்களுக்கு ஏற்படுகிற செலவுகள் எவ்வளவு என்பதை பாருங்கள். "சர்க்கார் நம்மிடம் வரிவாங்குகிறார்கள், கொள்ளை அடிக்கிறார்கள், அது செய்யவில்லை, இது செய்யவில்லை வீண் செலவு செய்கிறார்கள், மக்களுக்கு படிப்பு இல்லை, ஒழுக்கம் இல்லை," என்று சத்தம் போடுகிறோமே. அப்படிப்பட்ட நாம் இந்த சாமிகள் பெயரால் அடிக்கப்படும் கொள்ளைகளை கொஞ்சமாவது கவனிக்கிறோமா? அல்லது அவைகளை நிறுத்தவாவது பாடுபடுகிறோமா என்பதை யோசிக்கவேண்டாமா?

திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள ஒரு 45 கோயில்களை மாத்திரம் கணக்குப் போட்டுப் பாருங்கள். திருநெல்வேலி கோயிலுக்கு வருஷம் ஒன்றுக்கு 70 ஆயிரம் ரூபாய்வரும்படி. சங்கரன் கோயிலுக்கு வருஷம் 50000ம் ரூ வரும்படி. குற்றாலம் கோயிலுக்கு வருஷம் 40000 ரூ. திருச்செந்தூர் கோயிலுக்கு 1½லட்சம் ரூ வரும்படி. ஆக நான்கு கோயிலுக்கு மாத்திரம் சுமார் மூன்று லட்சம் ரூபாய்க்குக் குறையாமல் வரும்படி வருகிறதாக இந்த தேவஸ்தானநிர்வாகிகளால் கேள்விப்பட்டேன். இது தவிர இந்த கோயிலுக்கு வருகிற பக்தர்கள் போக்கு வரவு, தேங்காய்பழம், நெய், தயிர், பஞ்சாமிர்த அபிஷேகம், மேளம் தாளம், தாசி சதிர், பாட்டுக்கச்சேரி, உத்சவம், முதலியவைகளில் செலவு செய்யும் பணம் எவ்வளவு? இவைகள் எல்லாம் எதற்காக உபயோகப்படுகிறது என்பதையும் யோசியுங்கள். நீங்கள் கீழ் ஜாதி, பூஜை பண்ணுகிறவனும் சிலரும் மாத்திரம் உயர்ந்த ஜாதி, ஆதலால் நீங்கள் கொடுக்க வேண்டியது, மற்றவன் சாப்பிடவேண்டியது என்பதல்லாமல் வேறு எதற்கு உபயோகப்படுகிறது என்பதை நன்றாய் கவனியுங்கள். இந்தமாதிரி செய்யும்படி உங்களை எந்த சாமி கேட்கிறது. அல்லது கட்டளை இடுகிறது.

சில வயிற்றுச் சோற்றுச் சாமி உங்களை ஏமாற்றுவதும், நீங்கள் ஏமாறுவதும், நிஜமாலுமுள்ள சாமிகள் "நமக்கு இப்படியும் முட்டாள் பக்தர்கள் உண்டா" என்று பல்லைக்காட்டிக் கொண்டு சிரிப்பதும், அல்லாமல் வேறு என்ன பலன் கிடைக்கிறது.

சுயமரியாதைக்கு லாபமில்லை.

ஜார்ஜ்ஜோசப்புக்கு ஏற்பட்ட ஏமாற்றம்.

காங்கிரஸ் என்பது ஓர் பெரிய தேசத்துரோகமான சபையென்றும், அது பார்ப்பனர்களும் படித்தவர்களுமான சிலர் தேசத்தைகாட்டிக் கொடுத்து பிழைப்பதற்காக ஏற்படுத்திக்கொண்ட சபை யென்றும், நாட்டில் எத்தனைக்கெத்தனை காங்கிரசுக்கு செல்வாக்கிருக்கிறதோ அத்தனைக்கத்தனை தேசத்துக்கும் குறிப்பாய் பார்ப்பனரல்லாதாருக்கும், ஏழை மக்களுக்கும் துரோகமும் கஷ்டமும் ஆபத்துமே அதிகரிக்குமென்றும், எவ்வளவோ ஆதாரங்களுடன் முழு முடர்களுக்கும் புரியும்படியாக புள்ளி விபரங்களுடனும் உண்மை சம்பவங்களுடனும் எழுதியும் பேசியும் வந்திருக்கிறோம் இது இன்று நேற்றல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம் ஆதார மூலமாய் அறியவேண்டுமென்கிற ஆவலுள்ளவர்களுக்கு ஒரு விஷயத்தை ஞாபக மூட்டுகிறோம். சுமார் நான்கு வருஷங்களுக்கு முன்பாக சென்னை மைலாப்பூர் மந்தைத் தெருவில் நாம் ஒரு பிரசங்கம் செய்ததற்காக சர்க்கார் ராஜத்துவேஷத்திற்காகவும் வகுப்புத்துவேஷத்திற்காகவும் நம்மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டது நேயர்களுக்கு நினைவிருக்கலாம், அந்தப்பிரசங்கத்திலேயே இந்த விஷயமாய் யோசிப்பது ஆதாரத்தில் இருக்கிறது. ஆதாரத்தில் இன்றும் இருக்கிறது ஆனாலும், நமது நாட்டில் வெகு பேருக்கு இது சமயம் காங்கிரஸை நிவர்த்திக்கும் உத்தியோகத்திற்கும், பிழைப்புக்கும் அஸ்பதமான ஸ்தாபனமாய்விட்டதால் இந்தக்கூட்டத்தாருக்கு புத்திவரும்படி செய்து நாட்டையும் மக்களையும் காப்பாற்றுவது பெருத்த கஷ்டமான காரியமாயிருந்து வருகிறது. நம் நாட்டுப் பத்திரிகைகளும், பெரும்பாலும் வேறு தொழிலில் பிழைப்பதை மிக கஷ்டமாய் கருதுபவர்களாலேயே நடத்த ஏற்பட்டுப் போய்விட்டதால், தேசத்தையாவது பாமர மக்களையாவது சத்தியத்தையாவது தங்களது மனதில் தோன்றும் உண்மையையாவது ஒரு சிறிதும் கவனிக்காமலும், இம்மாதிரியான தங்கள் தொழிலுக்கு வெட்கப்படாமலும், ஒருவரைப்பார்த்து ஒருவர் அவருக்கில்லாத வெட்கம் நமக்கு ஏன் என்பதாக ஆடுகள் போல ஒரே அடியாய் எல்லாம் தலை துணிந்துகொண்டு ஒன்றன்பின் ஒன்றாய் "காங்கிரஸ்" "சுயராஜ்யம்" 'தேசியம்' "உரிமை" "விடுதலை" என்கிற பெயர்களை வைத்துக்கொண்டு நாட்டைப் பாழ்படுத்தி வாழ்ந்து வருகின்றன.

ராஜாங்கம் என்பதும் இந்த மாதிரி 'தேசிய' வாதிகளினுடையவும், அரசியல்காரர்களினுடையவும், பத்திரிகைக் காரர்களினுடையவும் நாணயத்திற்கும் யோக்கியதைக்கும் ஒரு சிறிதும் குறைந்ததல்ல. ஆனதால் ஏறக்குறைய இருகூட்டத்தாரும் அந்தரங்கத்தில் ஒன்றுசேர்ந்தே இக்கொடுமைகளைச் செய்துவருகிறார்கள் என்று சொல்லத்தக்க மாதிரியே நடந்துவருகிறார்கள் இந்தக் கொடுமையிலிருந்து மக்களை தப்புவிக்கலாம் என்று யாராவது வேலை செய்து, அது ஏதாவது சிறிது பலன்தரக்கூடிய நிலைமைக்கு வந்துவிட்டால் அதையும் ஒழிப்பதற்கு அதன் விரோதிகளான முன் சொல்லப்பட்டவர்கள் ஏதாவது ஒரு தந்திரம் செய்து மக்களை ஏமாற்றிவிடுகிறார்கள். இந்த மாதிரி தந்திரத்தின் ஒரு பகுதிதான் இப்போது மகாத்மாவைக் கூட்டி வந்து "எல்லோரும் காங்கிரசில் சேருங்கள் காங்கிரசில் சேருங்கள்" என்று சொல்லச் செய்ததான பார்ப்பனபிரசாரமும் என்பதே நமது அபிப்பிராயம். இந்த காங்கிரசில் உள்ள "தலைவர்கள்" "தேசாபிமானிகள்" என்பவர்களைப் பற்றி எழுதுவதென்பது கொஞ்ச இடத்தில் அடங்கக்கூடிய காரியம் அல்ல. அன்றியும் இந்த வியாசம் அதற்காக எழுதத்தொடங்கினதுமல்ல. ஆதலால் ஒரே ஒரு முக்கிய தலைவரின் பெயரையும் கொடிவழியையும் சொல்லிவிட்டால் மற்ற தலைவர்களைப்பற்றி அவரவர்களே ஞாபகப் படுத்திப் பார்த்துக்கொள்ளலாம்.

அதாவது ஸ்ரீமான் சத்தியமூர்த்தி என்பவர் இதுசமயம், சட்டசபை, காங்கிரசு, சுயராஜ்யக்கக்ஷி முதலியவைகளில் முக்கியஸ்தராயிருப்பதுடன் "நாட்டின் அபிப்பி

(இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)

மகாத்மாவும் காங்கிரசும்.

காங்கிரஸ் ஏற்பட்ட முதல் நாளது வரை பொது மக்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படவில்லை என்பதையும் பல கெடுதிகள் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் மகாத்மா மனதார அறிந்திருந்தும், அக்கெடுதிகளை ஒழிக்க தன்னால் கூடியவரை பாடுபட்டுப் பார்த்தும் முடியவில்லை என்று ஒப்புக் கொண்டும், காங்கிரஸ் பெயரைச் சொல்லிக் கொண்டு ஒரு கூட்டத்தார் பாமர மக்களை ஏமாற்றிப் பிழைக்கிறார்கள் என்பதையும் ஒப்புக்கொண்ட பிறகும், மகாத்மா எல்லோரையும் காங்கிரசில் சேருங்கள் என்பதும் பம்பாய் பார்ப்பனரல்லாதார் மகாநாட்டுக்கு மகாநாட்டார் மகாத்மாவை அழைத்தால் அதற்கு பதிலாக "நல்ல எண்ணத்தோடு எல்லோரும் காங்கிரசில் சேருங்கள்" என்று தந்தி அடிப்பதும் நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது. மகாத்மா காந்திபோன்றவர்களே காங்கிரஸ் முத்திரை (லேபில்) இல்லாமல் மகாத்மாவாக இருக்க முடியவில்லை என்றால் மற்றவர்கள் காங்கிரஸ் முத்திரையைப் போட்டுக்கொண்டு வாழ்வதில் நமக்கு ஆச்சரியம் எப்படித் தோன்றும்.

பம்பாய் மாணவர்களும் சென்னை மாணவர்களும்.

பம்பாய் மாணவர்கள் கொஞ்ச காலத்துக்கு முன் ஒரு கூட்டம் கூடி, மதங்களாலும் மதாச்சாரியார்கள் பிரசாரங்களாலும் மத சம்மந்தமான புராணக் கதைகளாலும் மக்களுக்குள் ஒற்றுமை குறைந்து வேற்றுமை ஏற்பட்டு விடுதலை கெட்டு வருகிறதென்றும் பாதிரிகளும், சாஸ்திரிகளும், மவுல்விகளும் ஒழியவேண்டுமென்றும் சாங்கோபாங்கமாய் பேசி, அவைகளை ஒழிப்பதற்கு முதலில் மூடநம்பிக்கைகளையும் கட்டுக்கதைகளான புராணக் கதைகளையும் இதிகாசங்களையும் ஒழிக்க ஒரு தீர்மானம் செய்திருக்கிறார்கள். நமது மாகாணத்திலோ மாணவர்களுக்கு மகாத்மா காந்தியால் மூடநம்பிக்கைப் பிரசாரம் செய்யப்படுகிறது. பம்பாயுக்கும் சென்னைக்கும் உள்ள வித்தியாசம் எவ்வளவு பாருங்கள்!

காங்கிரஸ் தலைமை.

டாக்டர் அன்சாரி அவர்களுக்கு இவ்வருஷக் கோடியில் சென்னையில் கூட்டப்போகும் இந்திய தேசிய காங்கிரஸ் என்னும் கூட்டத்திற்கு தலைமைப் பதவி உறுதியாகி விட்டது. இது டாக்டர் அன்சாரி அவர்கள் சென்ற வருஷம் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருடன் போட்டி போடாமல் விலகிக் கொண்டதற்காகவும், மகமதியப் பிரதிநிதித்துவத்திற்காக ஏற்படுத்தி இருக்கும் தனித் தொகுதித் தேர்தல் வேண்டியதில்லையென்று சொன்னதற்காகவும், நமது பார்ப்பனர்களால் அளிக்கப்பட்டது என்பது மிகையாகாது. பார்ப்பனர்களுக்கு இஷ்டமில்லாதிருந்தால் இது கிடைத்திருக்காது. எனவே என்னே நமது பார்ப்பன சக்தி!

இந்திய சட்டசபையில் மூடநம்பிக்கைக்கு தீர்க்காயுசு

அறிவின் வளர்ச்சிக்கு ஆபத்து

'மதாச்சாரியார்களை தூஷிப்பதைத் தடுக்கவேண்டியதற்காக' என்னும் பெயரால் இந்திய சட்டசபையில் ஒரு சட்டம் நிறைவேறவேண்டிய சடங்குகள் எல்லாம் செய்தாய்விட்டது இனி "சட்டமாய் விட்டது" என்று சொல்லவேண்டியதுதான் பாக்கி.

இந்த சட்டத்தைப்போல் ஒரு முட்டாள்தனமானதும் மனித சமூகத்தின் அறிவு வளர்ச்சிக்கு ஆபத்தானதுமான சட்டம் உலகத்தில் எந்த சட்ட புஸ்தகத்திலுமே இருக்காது என்பது நமது அபிப்பிராயம். இதைப்பற்றி முன்னமே ஒருதடவை எழுதியுமிருக்கிறோம்.

மகமது நபிகளை எவனோ ஒருவன் கண்டித்துவிட்டான் என்கிற காரணத்திற்காக உலகத்தையே குருடர்களும் செவிடர்களுமாக்க ஒரு சட்டம் கொண்டுவருவது எவ்வளவு கொடுமையானது என்பதை யாரும் யோசிக்காமல் இம்மாதிரியான அயோக்கியமான காரியத்தில் இறங்குவது நமக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது. ஒரு யோக்கியனை ஒரு அயோக்கியன் கண்டித்துவிட்டதற்காக உலகத்திலுள்ள அயோக்கியர்களையெல்லாம் எந்த யோக்கியனும் கண்டிக்கக்கூடாது என்று சட்டமியற்றுவது, பிசாசுகள் அரசாங்கத்தில் கூட நடைபெறமுடியாதகாரியம் என்பதே நமது அபிப்பிராயம். மதத்தலைவர்கள் என்பவர்கள் யார் என்று யார் முடிவுசெய்வது? ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்காரும் சத்தியமூர்த்தியும் நமக்கு மதத்தலைவர்கள் ஆகிவிடலாம். ஒவ்வொரு மதத்தை (கொள்கையை) உபதேசிப்பவனும், தனக்கு சில சிஷ்யர்களை பண்ணிக்கொடுத்து சேர்த்துக்கொண்டு புராணம் எழுதிவைத்துக் கொள்ளுபவனும் அந்த மதத்தலைவன்தான். எந்தெந்த மதங்கள் இருக்கிறதென்று யாரால் நிர்ணயிக்க முடியும்? இனி மதங்கள் ஏற்பட முடியாது என்பதற்கு என்ன உறுதி? யார் யார் மதத்தலைவர்கள் என்பதற்கு என்ன ஆதாரம்? கடவுள் என்பவரோ ஒவ்வொருவனுக்கு ஒவ்வொரு விதமாய் அதாவது ரூபமாயும், குணமாயும், அரூபமாயும், நிர்குணமாயும் இருக்கிறார் என்கிறார்கள்.

ஒவ்வொருவன் கொள்கைக்கு ஒவ்வொருவன் கொள்கை விரோதமாய் இருப்பதாகக் காணும்போது, அவனது கருத்தையும் அறிவினதையும் எடுத்துச் சொல்லாமல் இருக்கவேண்டுமென்பதுதானே சட்டத்தின் கருத்து. இது முறையா? இது தருமமா? இது தர்மம் தானா? "குசுவு விட்டதற்காக குண்டியை அறுத்து விடுவதா" என்பதாக ஒரு பழமொழி உண்டு. அது போல் சர்க்காரும் இந்திய சட்ட சபை மெம்பர்களும் நடக்கிறார்கள்.

இச்சட்டத்தால் பெரிதும் பார்ப்பனர்களுக்கும் சர்க்காருக்கும் பார்ப்பன வக்கீல்களுக்கும்லாபமேயல்லாமல் முஸ்லீம்களுக்கு யாதொரு லாபமும் இல்லாததோடு பின்னால் கண்டிப்பாய் தொந்தரவுகளும் ஏற்படும் என்பதே நமது அபிப்பிராயம்.

மறுபடியும் பெசண்டம்மையார்

ஒரு விதத்தில் மறைந்து போன ஸ்ரீமதி பெசண்டம்மையாரின் அரசியல் செல்வாக்கை மறுபடியும் உயிர்ப்பிக்க கொஞ்ச நாளாகவே அந்தரங்கத்தில் பல ஏற்பாடுகள் நடந்து வருகின்றதை நாம் அறிவோம். அதற்காக பல பத்திரிகைகளையும் வசப்படுத்த செய்துவரும் முயற்சியையும் நாம் அறிந்து வருகிறோம்.

பெசண்டம்மையாரின் ஆதிக்கம் அல்லது தன்மை என்பது பெரிதும் விபூதி பூசும் அய்யர்களான பார்ப்பனர்களின் ஆதிக்கம்தான். மகாத்மா காந்தியின் ஆதிக்கம் என்பது பெரிதும் நாமம் போடும் அய்யங்கார்களான பார்ப்பனர்களின் ஆதிக்கம்தான். "நாட்டுக்கு எந்த துரை வந்தாலும் தோட்டிக்கு புல் சுமக்கும் வேலை போகாது" என்பது போல் பார்ப்பன ஆட்சியால் எந்த தலைவர் போய் எந்த தலைவர் வந்தாலும் பார்ப்பனர்களுக்கு யோகமே தவிர நமது கதி இவர்கள் காலை நக்கிக் கொண்டு திரிய வேண்டியதாய்த்தான் இருக்குமே அல்லாமல் ஒருக்காலும் சுயமரியாதையுடன் வாழமுடியாது. இதற்கு சாட்சி மகாத்மா ஆதிக்கத்தால் ஏற்பட்ட பலனே போதுமானது. இனி நமக்கு மகாத்மாக்களும் வேண்டாம், உலககுருக்களும் வேண்டாம். நமது காலிலேயே நாம் நிற்கும்படியான யோக்கியதை நமக்குவரும் வரை அனாவசியமாய் இவைகளிலெல்லாம் கவனம் செலுத்தாமலிருப்பதே மேலானது.

நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே.

சுவாமி வேதாசலம் அவர்கள் அருமைக் குமாரத்திக்கும் நமது நண்பர் திருவரங்கம் பிள்ளை அவர்களுக்கும் நடந்தேறிய திருமணச் சடங்கானது தமிழ் மக்களையே குழப்பத்தில் கொண்டுவந்து விட்டுவிட்டது.

சுவாமி வேதாசலம் அவர்களும் திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களும் தமிழ் நாட்டிலேயே தமிழ் மக்களின் பழய நாகரீக விஷயமாய் தக்க ஆராய்ச்சி உள்ளவர்கள். இவர்களை இவர்களுக்குச் சமமானவர்கள் அல்லது இவர்களுக்கு அடுத்தவர்கள் என்று சொல்லவேண்டுமேயல்லாமல் இவர்களுக்கு மேற்பட்டவர்கள் என்று சொல்லமுடியாது என்பது நமது அபிப்பிராயம். அப்படிப்பட்ட இருஞானபாஸ்கரர்கள் கூடிச்செய்த திருமணம் பார்ப்பனீயத்திருமணமாய் நடந்தேறிற்றென்றால் மற்றவர்கள் எவ்வளவு தூரம் பார்ப்பனீயத்திற்கு உயர்வு கொடுக்கமாட்டார்கள்! உயர்வு கொடுக்க விரும்புவார்களா என்பதை யோசிக்கும்படி அவர்களுக்கே விட்டுவிடுகிறேன். இதற்கு ஏதாவது தகுந்த சமாதானம் இவர்கள் சொல்லாத வரையில் திருத்தமுடியாத குற்றமாவதோடு மக்களுக்கு குழப்பமும் நமது முயற்சிக்கு இடையூறும் ஏற்படும் என்பதையும் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.



குடி அரசு

ஈரோடு, பிரபவ-ஹு ஆவணி 26வ

சென்னைக்கு செல்கிறோம்

சுமார் ஐந்து ஆறு மாதங்களாய் நாம் தெரிவித்துக் கொண்டுவந்தபடிக்கு "திராவிடன்" பத்திரிகை விஷயமாய்ச் சென்னைக்குச் செல்லுகிறோம்.

பார்ப்பனரல்லாதார் நன்மையையும் சுயமரியாதையையும் முன்னிட்டு 'திராவிடன்' பத்திரிகையையும் ஏற்று நடத்த வேண்டும் என்று நம்மை பலர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பார்ப்பனரல்லாதார் இயக்கமாகிய தென் இந்தியர் நல உரிமைச்சங்கத்தின் சில முக்கிய தலைவர்களுக்கும் தோன்றிற்று. இதன் பயனாக நாம மகாஜனங்களையும் அபிப்பிராயம் கேட்டதில் அவர்களும் பெரும்பான்மையோர்கள் அந்தப் படியே கட்டளை இட்டார்கள். அன்றியும் பல பிரபுக்களும் வேண்டிய சகாயம் செய்வதாக வாக்களித்து ஏற்றுக்கொள்ளும்படியாகவே வற்புறுத்தினார்கள். எனவே சென்னைக்குச் செல்லுகின்றோம்.

இதைப்பற்றி இந்தச் சமயத்தில் இரண்டொரு வார்த்தைகள் தெரியப்படுத்தவேண்டியது அவசியமெனக் கருதி வெளியிடுகிறோம். முதலாவது ஏற்கனவே தமிழ்நாட்டில் 2, 3 தமிழ் தினசரிகள் இருக்கும் போது "திராவிடன்" என்கிற, தினசரி பத்திரிகை ஒன்று நமக்கு வேண்டுமா? தமிழ் மக்கள் இவ்வளவு பத்திரிகைகளையும் ஆதரிப்பார்களா? என்பது முக்கியமானது.

தமிழ் நாட்டில் எத்தனையோ தினசரி பத்திரிகைகள் இருந்தாலும் மற்ற சமூகத்தாருக்கு இருப்பது போல பார்ப்பனரல்லாதாராகிய $3\frac{1}{2}$ கோடி மக்களின் நலத்தையே பிரதானமாய்க் கருதி உழைக்கும் தினசரி பத்திரிகை நமக்கு 'திராவிடனை' விட வேறு இல்லை என்றே சொல்ல வேண்டியிருக்கிறது. அதாவது பார்ப்பனர்களால் நடத்தப்படும் இரண்டு தினசரிகள் கண்டிப்பாய் பார்ப்பன நலமபகாரமாகவே, பார்ப்பனர்கள் நன்மைக்கான கொள்கைகளுடனேயே நடைபெற்று வருகிறதுமல்லாமல், அதுவே தமிழ் நாட்டு மக்களின் அபிப்பிராயம் என்று ஜனங்கள் ஏமாறும்படி நடத்தப்படுகின்றன என்பதும் யாவருமறிந்ததே. பார்ப்பனரல்லாதாரால் நடத்தப்படும் ஒரு தினசரியும் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்தில் கருத்தும் கவலையும் இருப்பதாகக் கண்டாலும் பார்ப்பனக் கொடுமைகளைத் தாராளமாய்க்கண்டிப்பதானாலும் அதன் அரசியல் கொள்கை பார்ப்பனரல்லாதாரை ஒரு நாளும் தலையெடுக்க ஒட்டாததாகவும் பார்ப்பனர்களிடம் இருந்து தப்பமுடியாததாகவுமே இருக்கிறது.

இந்த விஷயத்தில் பார்ப்பனப் பத்திரிகைகளுக்கும் மற்றும் அனேக பார்ப்பனரல்லாதாரப்பத்திரிகைகளுக்கும் ஒரு சிறிதும் வித்தியாசமில்லை.

தவிர தமிழ் மக்கள் இவ்வளவு பத்திரிகைகள் இருக்கும் போது இதையும் ஆதரிப்பார்களா என்றால் ஆதரித்துத் தான் ஆக வேண்டும். ஒரு சமயம் ஆதரிக்காவிட்டாலும் தமிழ் மக்களுக்கு இதை ஆதரிக்கும் புத்தி வரும்வரை எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டாலும் நடத்தித்தான் தீரவேண்டிய நிலையில் இருக்கிறோம். இல்லாதவரை தமிழ் மக்கள் மீளுவதற்கு வேறு மார்க்கமில்லை என்றே சொல்லுவோம்.

ஆனால் இது கஷ்டமான வேலை என்பது நமக்கு நன்றாய்த் தெரிகிறது.

ஒரு வேலையும் செய்யாமல் 'வருக வருக மகாத்மா வருக, மகாத்மாவுக்கு ஜேய்!" என்று சொல்லி விட்டு மகாத்மாவின் பார்ப்பன பிரசாரத்தையும் போட்டுவிட்டு சும்மா இருந்தாலே ஓட்டுக்கிடைத்துவிடும்; பத்திரிகையும் தாராளமாய் செலவாகும்; மேடைகளிலும்பேச இடமும் கிடைக்கும், அதோடு மகாத்மாபேட்டியுடன் 'யங்இந்தியா' விலும் 'நவஜீவன்'னிலுங்கூட இடமும் கிடைத்துவிடும். இது மிகவும் சுலபமான வேலைதான். இவைகளில் நமது மக்களுக்கு என்ன பலன் உண்டாகும் என்பதுதான் நமது கேள்வி. ஆகையினாலேதான் இது சமயம் சற்று கஷ்டமாயிருந்தாலும் பலனுள்ள வேலையைச் செய்ய வேண்டியிருக்கிறது.

கொள்கைகள்.

"திராவிடன்" கொள்கைகள் 'குடி அரசு' க்கொள்கைப் படியே தான் இருக்கும். "குடி அரசி" ன் கொள்கைகள் யாவரும் அறிந்திருப்பார்களென்றே நினைக்கிறோம், அதாவது: பார்ப்பனரல்லாதாரை அழுத்தி பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்த பார்ப்பனர்களுக்கு நமது நாட்டில் ஆயுதங்களாக இருக்கும் அரசியல் புரட்டையும், மதப்புரட்டையும் அடியோடு அழிப்பதுடன் பார்ப்பனீயத்தையும் ஒழித்து மக்களுக்கு சுயமரியாதை உண்டாகும்படி செய்வது என்பதுதான். இதற்குத் 'திராவிடன்' சொந்தக்காரர்கள் சம்மதிக்காத போது நாம் விலகி விடுவோம் என்பது உறுதி. இது சமயம் இந்தக் கொள்கையை ஒப்புக்கொள்ளவோ ஆதரிக்கவோ நமது நாட்டில் ஒரு குட்டித் தலைவராவது இல்லை ஒரு குட்டிப் பத்திரிகை யாவது இல்லை. ஆனாலும் நாம் அதற்காக பயப்படவில்லை. ஏனெனில் இக்காரியங்கள் நடைபெறாமல் போனால நமது பார்ப்பனரல்லாதார் சமூகத்துக்கு மாத்திரமல்லாமல் இந்தியாவுக்கே சுயமரியாதையும் விடுதலையும் ஒருக்காலும் ஏற்படப்போவதில்லையென்பதே நமது முடிவு. பார்ப்பனரல்லாதார் இயக்கமாகிய தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தாரும் அவர்களது பத்திரிகைகளாகிய 'ஜஸ்டிஸ்' 'திராவிடன்' பத்திரிகைகளுங்கூட இக்கொள்கைகளைப் பொறுத்தவரையில் நம்மிடம் சிறிது அபிப்பிராயபேதம் கொண்டிருப்பதும் நமக்குத் தெரியும். நம்மிடம் 'திராவிடன்' ஒப்புவிக்கப்பட்டால் இக்கொள்கைகளுடன் தான் அது நடத்தப்பெறும் என்பதாக அவர்களுக்கும் இப்போதே சொல்லி விடுகிறோம். அரை நூற்றாண்டாக அநேக இந்திய மேதாவிகளால் உண்டாக்கப்பட்டதாகச் சொல்லப்படும் அரசியலை குற்றம் சொல்வதும், ஆயிரக்கணக்கான வருஷங்களாய் ரிஷிகளாலும், முனிவர்களாலும், கடவுள் அவதாரங்களாலும் உண்டாக்கப்பட்டதாய்ச் சொல்லப்படும்—மகாத்மாகாந்தியாலும் கூட சொல்லப்படும்—மத இயலைக் குற்றம் சொல்வதும் இரத்தத்திலும், நரம்புகளிலும், எலும்புகளிலும், சதையிலும் ஊறிக்கலந்து இருக்கும் இவ்விஷயங்களைக் குற்றம் சொல்லி பக்கலைதிருப்புவது என்பது ஒருக்காலும் சுலபமான காரியம் என்று சொல்ல முடியாது. அன்றியும் தற்போது எல்லாத் துறைகளின் ஆதிக்கத்திலும், அதிகாரத்திலும் இருக்கும் பார்ப்பனீயத்தை ஒழிப்பது என்பது இவற்றையெல்லாம்விட அதிகமான கஷ்டமென்பதும் நாம் சொல்லாமலே விளங்கும். இதற்கு ஆதாரமாக மகாத்மா காந்தியினாலேயே "பார்ப்பனீயமில்லாதவர்" என்று மதிக்கப்பட்ட ஒரு பார்ப்பனர் ஒருசமயம் சொன்ன வார்த்தைகளைக் குறிப்பிடுகிறோம்.

"பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிக்க இந்த நாட்டில் ஆயிரக்கணக்கான வருஷங்களாக அநேக பெரியவர்களாலும், சித்தர்களாலும், சமணர்களாலும், புத்தர்களாலும் எவ்வளவோ பாடு பட்டாய் விட்டது. மற்றும் பல மதிய அரசாங்கத்தாராலும் எவ்வளவோ பாடுபட்டுப் பார்த்தாய் விட்டது. இதனால் இவ்வளவு பெரும் தோற்றார்களே யொழிய ஒருவரும் வெற்றிபெறவில்லை. இந்த நிலையில ஒருவனுடைய முயற்சி என்னமாகிறது?" என்று சொல்லி பரிகாசம் செய்தார்.

இந்த வார்த்தைகள் வாஸ்தவமாக இருந்தாலும் இருக்கலாம். அதுபோலவே நமது முயற்சியும் வெற்றிபெறாமல் தோல்வியும் உறலாம். ஆனாலும் ஒன்றுமாத்திரம் சொல்லுவோம். என்னவெனில் இம்முயற்சிகள் வெற்றிபெறாமல் நமது நாட்டுக்கும் சமூகத்துக்கும் விடுதலை இல்லை என்பதை மாத்திரம் மறுபடியும் உறுதியாய்ச்சொல்லுகிறோம். எனவே நமக்குச்சரி என்றுபட்ட வழியில் உழைக்கவேண்டியது நமது கடமையே அல்லாமல், வெற்றி, தோல்வி என்பவைகளைப்பற்றி முடிவு செய்துகொள்ள வேண்டியது நமது கடமை அல்ல.

தற்சமயம் திராவிடனுக்கு பத்திராதிபராயிருக்கும் ஸ்ரீ கண்ணப்பர் இதேகொள்கைகளையுடையவர் என்பதே நமது அபிப்பிராயம். அவர் பல வருஷங்களாக எவ்வளவோ கஷ்டங்களுக்கிடையில் நமது சமூக முன்னேற்றத்தையே பிரதானமாகக்கொண்டு அல்லும் பகலும் உழைத்து வந்திருக்கிறார். இனியும் அவரேதான் பத்திரிகை விஷயத்தில் நமது முக்கிய துணைவாயிருந்து நம்மை நடத்துவிக்கப் போகிறார்.

ஆதலால் அவரது தொடர்பு பத்திரிகையின் பிரதானஸ்தானத்தில் இருந்துகொண்டுதான் இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். நாம் "திராவிடனுக்கு"ப்போவதால் "குடி அரசு" என்ன ஆகுமோ என்பதைப் பற்றி அநேகருக்கு பெருங்கவலை ஏற்பட்டிருக்கிறது. திராவிடனைவிட "குடி அரசையே" நாம் பிரதானமாகக்கருதுகிறோம் என்பதை நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். அதைப்பற்றியாரும் கவலைப்படவேண்டியதில்லை.

கோயமுத்தூர் மகாநாட்டுத் தீர்மானத்தின்பலனாய் நமதுஇயக்கத்திற்கு சற்று ஆட்டம் கொடுத்துவிட்டதுடன் இவ்விஷயத்தில் மக்களுக்குசிறிதுஊக்கமும்குறைந்துவிருக்கிறது என்பதும் நமக்கு நன்றாய்த் தெரிகிறது. நல்ல சமயத்தை கோயமுத்தூர் தீர்மானங்கள் பாழ்படுத்திவிட்டது என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டியதுதான். அப்பொழுதே நமது இயக்கத்தில் உண்மையான அன்புள்ளவர்களெல்லாம் இந்த விஷயத்தை தீர்க்கதரிசிகள்போலவே எடுத்துச் சொன்னார்கள். சொல்லியும் சிலருடைய சுயநலமும் அவர்களிடத்தில் நமக்கு ஏற்பட்ட பரிதாபமும்,நமதுபலக்குறைவும் அதுசமயம்சும்மாயிருக்கச்செய்துவிட்டது.

மூன்று மாதத்தில் எவ்வளவோ காரியத்தைச் சாதித்துவிடுவதாக வீரப்பிரதாபம் பேசியவர்கள் இன்று இருக்குமிடம் தெரியாமல் இருந்து வருகிறார்கள். இவர்கள் எந்தஊர்களுக்குப் போனார்கள்? எத்தனை மெம்பர்களை காங்கிரசுக்கு சேர்த்தார்கள்? காங்கிரசில் எந்தவிதமான ஆதிக்கத்தைப் பெற்றார்கள்? அல்லது யாருடைய ஆதிக்கத்தை குறைத்தார்கள்? என்பதைப்பார்த்தால் ஒன்றுமே காணோம். தானாக காங்கிரசில் ஒருவன் சேரவேண்டுமென்று வந்தாலும் அவனைச்சேர்க்க மாட்டேன் என்று சொல்லுகிறவர்களின் அயோக்கியத்தனத்தைக்கூட ஏன் என்று கேட்பதற்கு யோக்கியதை இல்லாதநிலையில் இந்த வீரர்கள் இருக்கிறார்கள்.

கோவைத் தீர்மானத்திற்கு அநுகூலமாயிருந்தவர்களில் முக்கியஸ்தரான பனகால் ராஜாவின் மேலவிலாசமே இப்பொழுது தெரியமுடியவில்லை. ஸ்ரீமான் ராமசாமி முதலியார் அவர்கள் பம்பாயில் போய் அங்குள்ளவர்களையும் கெடுத்துவிட்டுவந்து சேர்ந்தாரே அல்லாமல் வேறொன்றும் செய்ததாய்க்காணவில்லை. ஸ்ரீமான் சண்முகம் செட்டியாரவர்கள் டெல்லிக்குப்போய் மன்னிப்புக்கேட்டுக்கொண்டார். ஸ்ரீமான் கல்யாணசுந்தர முதலியாரவர்களுக்கு இப்படி ஒரு சம்பவம் நடந்ததாகவே இப்போது ஞாபகமில்லை. ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்கள் சங்கதியோ நாம சொல்லித்தெரிந்து கொள்ளவேண்டிய நிலையில் ஒருவரும் இல்லை.

அன்றியும் இதன் பலனாக "பார்ப்பனரல்லாதாருக்கு இப்பொழுதுதான் புத்திவந்தது. காங்கிரசின் பெருமையை ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர்கள் இப்பொழுதுதான் உணர்ந்தார்கள்" என்று நமது எதிரிகளான பார்ப்பனர்கள் சொல்லிக்கொள்ளவும் நமது பாமர மக்கள் மறுபடியும் ஏமாந்து போய் பார்ப்பனர்கள் சூழ்ச்சிக்கு ஆளாகவும் நேர்ந்தது.

அல்லாமலும் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் அவர்களுக்கு காங்கிரசின் பேரால் செலவு செய்ய இன்னமும் கொஞ்சம் நம்முடைய பணம் போய்ச்சேரவும் தாராளமாய் இடமேற்பட்டதே அல்லாமல் மற்றபடி வேறு என்ன காரியம் நடந்தது? என்ன பலன் ஏற்பட்டது? என்பதை யோசித்தால் விளங்காமல் போகாது. இவற்றை எதற்காக இது சமயம் எழுதுகிறோம் என்றால் மறுபடியும் நமது மக்களை "மதுரை மகாநாட்டிற்கு" திருப்பிக் கொண்டு போகவேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை அறிவுறுத்தவும் அதற்காக எவ்வளவு கஷ்டப்படவேண்டி இருக்கிறது என்பதை யோசிக்கச் செய்யவுமே அல்லாமல் வேறில்லை.

எனவே நமது நாட்டிலுள்ள பார்ப்பனரல்லாத பிரமுகர்கள் இவ்விஷயங்களை நன்றாய் கவனிப்பதோடு மற்றொரு விஷயத்தையும் கவனிக்க வேண்டும். அதாவது "திராவிடனும்" "குடி அரசும்" பார்ப்பவர்கள் கையிலிருக்கும் உத்தியோகங்களையும் பதவிகளையும் பிடுங்கி பார்ப்பனரல்லாத ஜமீன்தார்களும் மிராஸ்தார்களும் வியாபாரிகளும் லேவாதேவிக் காரருமான பணக்காரர்களுக்கும் ஆங்கிலம்படித்த வக்கீல்களுக்கும் கொடுப்பதற்காகநடத்தப்படுகிறதென்று நினைப்பார்களானால் அவர்கள் கண்டிப்பாய் ஏமாந்து போவார்கள். எவ்வெவ்வித அரசியல் விஷயத்தில் பார்ப்பன ஆதிக்கத்தைவிட பணக்கார ஆதிக்கத்தைவிட வக்கீல் ஆதிக்கத்தைவிட வெள்ளைக்கார ஆதிக்கமே ஒழிக்கப்படவேண்டியவர்களுக்கும் ஏழைமக்களுக்கும் குடியானவர்களுக்கும் போக்கியதைகளுக்கும் அதிக மது கெடுதி இல்லாதது என்பதே நமது அபிப்பிராயம். வெள்ளைக்கார ஆதிக்கம் ஒழிவதாயிருந்தால் நேரே அது ஏழைமக்களான தொழிலாளர்கள் கைக்கு வருவது தான் நன்மையே அல்லாமல் ஏழைமக்களுக்கு பார்ப்பனர்களும் பணக்காரர்களும் வக்கீல்களும் தர்மகர்த்தாக்களாகவும் தரகர்களாகவும் இருக்கக்கூடாது என்றே சொல்லுவோம். இந்தக்கொள்கையின் பேரில் தான்பணக்காரர்கள் இப்பத்திரிகைக்கு உதவி செய்யவேண்டும், என்பதாகவும் இப்போதே வெளிப்படையாய் சொல்லிவிடுகிறோம்.

அதுபோலவே மத இயலில் நமக்கு உதவி செய்பவர்களும் இந்து மதம் என்பதான பார்ப்பன மதத்துடன் போர்புரிந்து வெற்றி ஏற்படுமானால் "சைவ சமயத்திற்கு அநுகூலமாகும்" என்றோ "வைணவ சமயத்திற்கு அநுகூலமாகு"மென்றோ "கிறிஸ்தவ மதத்திற்கு அநுகூலமாகு"மென்றோ "மகம்மதிய மதத்திற்கு அநுகூலமாகு"மென்றோ "மாத்துவமதத்திற்கு அநுகூலமாகு"மென்றோ ஒவ்வொருவரும் தன் தன் சுயமத நலத்திற்கு என்று நினைத்து கொண்டார்களானால் அவர்களும் ஏமாற்றமடைவார்கள் என்பதையும் இப்போதே சொல்லிவிடுகிறோம். பார்ப்பன மதம் ஒழிந்தால் உண்மையான சமரசமும் சன்மார்க்கமும் முடையதான மதம் ஏற்படவேண்டும். எல்லாமக்களுக்கும் சுயமரியாதை அளிக்கத்தக்கதாய் இருக்கவேண்டும். அதுவரையிலும் நாம் கவலைப்படமாட்டோம் என்பதையும் தெரிவித்துவிடுகிறோம்.

காந்தி பேட்டிக்கு
பார்ப்பனர்களின் ஆதிக்கம்.

ஆசிரியர் அவர்கட்கு,

ஐயா, நானும் எனது பெண்சாதி, பெண் குழந்தை எல்லாம் சேர்ந்து மற்றுமொரு நண்பருடன் மகாத்மாவை தரிசிக்க செவ்வாய்க்கிழமை காலை ஸ்ரீனிவாச அய்யங்கார் வீட்டிற்கு சிந்தாதிரிப் பேட்டையிலிருந்து சென்றோம். காந்தி வார்த்தைக்கு பக்தி வைத்து அதிக ஏழைத் தொழிலாளியாகிய நான் ரூ 15க்கு மேல் கதர் உடை புடவை முதலானவைகளும் வாங்கி நாங்கள் உடுத்திக்கொண்டே சென்றோம். அங்கு உட்சென்றதும் திரு ராஜகோபாலாசாரியார் கண்டு என்னசமாசாரமென்று விசாரித்தார். "மகாத்மாவை தரிசிக்க ஆவல்கொண்டிருக்கிறேன். பார்க்கவேண்டும்" என்றேன். என்னகொண்டுவந்திருக்கிறாய் என்றார் "ஒன்றுமில்லை" என்றேன். "பார்க்கமுடியாது" என்று சொன்னதும் நான் அவருடன் மகாத்மாவை பார்க்கவிட மன்றாடினேன். மறுத்துவிட்டு சென்றுவிட்டார், சிறிது நேரத்திற்குள் திரும்பிவந்து யாரோ ஒரு கனவான் உட்கார்ந்திருந்தவரை மட்டும் உள்ளே அழைத்துச்சென்றார். இந்த நிலையில் திரு. என். எஸ் வரதாச்சாரியார் வந்து "போகக்கூடாதென்றபின் ஏன் நிற்கிறீர் போம்" என்று என்மேல் கை போட்டார். திரு பாஷ்யம் வந்து "நான் உன்னைப் பார்த்ததே இல்லை, புதிதாக இருக்கிறாய் இப்படித்தான் சிலர் கதர் கட்டிக்கொண்டு குழப்புக்கெனவே வருவதுண்டு, வீண் கலாட்டா வேண்டாம், போய்விடும்" என்று தள்ள ஆரம்பித்தார். அத்துடன் "நீ உண்மை காந்தி சிஷ்யனானால் உன் வாயை மூடிக்கொண்டு சும்மா இருக்கவேண்டும்" என்று பாஷ்யம் கூறியதும் நான் மௌனமாய் இருந்தேன். உடனே நான் "சாமி கோவிலுக்குப் போனாலும் மூலவரை பார்க்க கிராக்கி செய்வது உங்கள் வழக்கமாகிவிட்டது, இங்கு வந்தாலும் இப்படியாகி விட்டதே, 'திரு. தண்டபாணி பிள்ளை பார்ப்பன சூழ்ச்சியில் மகாத்மா சிக்கிக்கொண்டார்' என்பது உண்மையாகவே இருக்கிறதே, என்ன அநியாயம் செய்கிறீர்கள், இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இவ்வித கோலம் செல்லும் என்று நினைக்கிறீர்கள்" என்று கூறித் திரும்பிவிட்டேன். சாதாரணமாய் ஏழைமக்களின் அன்பரைப் பார்க்க இப்பார்ப்பனர்கள் இத்தனை ஆதிக்கம் கொண்டாடினால் இன்னும் சகல அதிகாரமும் இவர்கள் கையில் வந்துவிட்டால் என்னதான் செய்யமாட்டார்கள். ஆதலால் ஏழை மக்களுக்கும் பெரும் பான்மையோருக்கும் பாடுபடும் நீங்கள் இதன் தன்மை இன்னதெனப் புகட்ட வேண்டுகிறேன்.

இப்படிக்கு அன்புள்ள,
கே. சம்பந்த முதலி.

கடைசியாக சில கனவான்களை நாம கேட்டுக்கொள்ளுவது என்னவென்றால் இம்முயற்சியில் நமக்கு உதவி செய்யாவிட்டாலும் நம்மை ஏமாற்றாமலாவது இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

நாடார் மகாஜன சங்கம், மதுரை.

1927 வருஷம் ஆகஸ்டு மாதம் 31 தேதி சங்கம் ஹாலில் நடைபெற்ற கவுன்சில் மீட்டிங்கின் நடவடிக்கைகள்.

வைஸ் பிரசிடெண்டு.

ஸ்ரீமான் ஊ. பு. அ. சௌந்தரபாண்டிய நாடார் M. L. C. அவர்கள் தலைமை வகித்தார்கள்.

அடியிற்கண்ட மெம்பர்கள் ஆஜராயிருந்தார்கள்.

1. ஸ்ரீமான்கள் ஊ. பு. அ. சௌந்திர பாண்டிய நாடார், பெ. சி. சிதம்பர நாடார், ஆ. லெ. ம. கருப்பணசாமி நாடார், மு. வடிவேல்நாடார், வ. அ. புன்னையப்ப நாடார், ஆ. அ. ஆறுமுக நாடார், பா. ம. பாண்டிய நாடார், மா. வேலு நாடார், ந. யோவான் நாடார், வ. அ. ஏம நாடார், மு சுடலை முத்து நாடார், ப. கா. முத்துசாமி நாடார், சிவ. அ. பால சுப்பிரமணிய நாடார், பெ. சு. பெரியசாமி நாடார், மா. வெ. பழனிசாமி நாடார்.

சங்கம் பிரசிடெண்ட் அவர்கள் ராஜினாமா லட்டர் ஏகமனதாய் ஒப்புக்கொள்ளப்பட்டது.

காரியதரிசி அவர்கள் தமது ராஜினாமா லட்டரை கவுன்சில் வேண்டுதலுக்கிணங்கி வாபீஸ் வாங்கிக்கொண்டார்கள்.

சென்ற கவுன்சில் மீட்டிங்கில் நியமித்த ஆடிட்டர்கள் இது வரையும் கணக்கை ஆடிட் செய்து ரிப்போர்ட் அனுப்பாததால் அடியிற் கண்ட கனவான்களை ஆடிட்டர்களாக நியமிக்கலாயிற்று.

ஸ்ரீமான்கள பா. ச. மா. பொன்னுசாமி நாடார், சு. மு. அ. வ. ஷண்முக நாடார், வ. அ. ஏம நாடார்.

கட்டிட கமிட்டி மெம்பர்கள் இதுவரையும் எவ்வித ரிப்போர்ட்டும் அனுப்பாததால் அடியிற் கண்ட இருகனவான்களை ஓர் கமிட்டியாக நியமித்து பிரசிடெண்ட் பேருக்கு கட்டிடம் வாங்க அதிகாரம் கொடுக்கத் தீர்மானிக்கலாயிற்று.

கட்டிடகமிட்டி. ஸ்ரீமான்கள் மா. வெ. பழனிசாமி நாடார், ஊ. பு. அ. சௌந்தர நாடார்.

கும்பகோணத்தில் நடைபெறப் போகும் 11-வது கான்பரன்ஸ் உபசரணைக் கமிட்டியை அங்கீகாரம் செய்து அதிலடங்கிய மெம்பர்களை சங்கம் அங்கத்தினர்களாகும்படி கேட்டுக்கொள்ளத் தீர்மானிக்கலாயிற்று.

11-வது கான்பரன்ஸுக்கு 50 கனவான்களை ஸப்ஜெக்ட் கமிட்டியாகவும் இன்னும் கமிட்டியின் யுத்தானுசாரப்படி இன்னும் மெம்பர்களைச் சேர்த்துக்கொள்ளவும் அதிகாரம் கொடுக்கத்தீர்மானிக்கலாயிற்று.

ஸ்காலர்ஷிப் கமிட்டியாரின ரிப்போர்ட்டை வாசித்து அடியிற்கண்ட மாணவ மாணவிகளுக்கு 1927-28 வருஷத்துக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கத் தீர்மானிக்கலாயிற்று.

ஸ்ரீமான்கள் T. S. ஐயாத்துரை B. A ஜுனியர், V. எஸ்வர்டாஸ் B. A, A. நல்லையா B. A. R. ரங்கசாமி F. A. சீனியர், E. சின்னப்பன் F. A, ஜீனியர், P. சுப்பிரமணியன் F. A, K முத்தையா F. A ஜீனியர், S பாக்கிய நாதன் V வகுப்பு, A. முத்தையா IV வகுப்பு, D. அருமை நாயகம்மாள் IV வகுப்பு.

சங்கம் பிரசிடெண்டாக வெ கனகசபை நாடார் அவர்களைத் தீர்மானிக்கலாயிற்று. வந்தனோபசாரத்துடன் இரவு 9-மணிக்கு மீட்டிங் முடிவு பெற்றது.

காரியதரிசி, நாடார் மகாஜன சங்கம்,
மதுரை

மகாத்மாவும், பார்ப்பனர்களும்

(திராவிடன் எழுதுவதாவது.)

மகாத்மா காந்தி சென்னையில் செய்து வரும் பிரசங்கங்களை நாம் மிக ஊன்றிப் படித்து வருகின்றோம். அவர் நம் வைக்கம் வீரர் திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் கூறியபடி சங்கராச்சாரியாராகி விட்டாரென்றே சொல்ல வேண்டும். பழைய ஒத்துழையாமையை மறந்து விட்டார், பகிஷ்காரங்களை மறந்து விட்டார், இப்பொழுது பிராமணப் பிரசாரத்தில் இறங்கி விட்டார். நேற்று பச்சையப்பன் கல்லூரியில் நடந்த ஒரு கூட்டத்தில் "நான் பிராமணர்களைப் போற்றுகிறேன்" என்று பேசியிருக்கின்றார். இது இம்மாகாணப் பிராமணரல்லாதாரை அவமானப்படுத்தி அவர்கள் மனத்தை புண்படுத்துவதாகும். இங்கே பிராமணர் பிராமணரல்லாதார் சண்டை நாளுக்குநாள் வளர்ந்து வருவதை மகாத்மா அறிவார். பிராமணர்கள் மதத்தின் பெயராலும் சாத்திரங்களின் பெயராலும், வேதங்களின் பெயராலும், மூட வழக்க வொழுக்கங்களின் பெயராலும் பிராமணரல்லாதாரை நசுக்கி வருகின்றார்கள். இந் நாட்டில தீண்டாமையும் சாதி வேற்றுமைகளும் இருந்து வருவதற்குக் காரணம் பிராமணர்களே யாவார்கள். ஆகையினாற்றான் பிராமணரல்லாதார் சாதிக் கொடுமை மதக் கொடுமை இவைகளினின்று விடுதலைபெற்று, இந்நாட்டை விட்டுத்தீண்டாமை, சாதி, முதலிய பேய்களை ஓட்டப் பார்ப்பனர்கட்கு எதிரிடையாய்ப் போர் தொடுத்திருக்கின்றார்கள். இந்நிலையில் மகாத்மா காந்தி பார்ப்பனர்களைக் கண்டிக்க வேண்டியிருக்க அவர்களை "நான் போற்றுகின்றேன்" என்று கூறுதல் எந்த பிராமணரல்லாதார் மனத்தைத்தான் புண்படுத்தாதிருக்கும்?

நாம் மட்டும் பார்ப்பனர்களுடன் போர் தொடுத்திருக்கின்றோமல்லோம். நம் பண்டை வரலாறுகளைப் படித்துப் பார்த்தால் அறிவிற்சிறந்த பெரியோர்களெல்லாம் பார்ப்பனர்களுடன் போர் தொடுத்திருக்கின்றார்கள் என்பது விளங்கும். புத்தர், மகாவீரர், அசோகர், திருவள்ளுவர் முதலிய பெரியோர்களெல்லாம் பார்ப்பனர்களுடன் போர்தொடுத்திருக்கின்றார்கள். ஏன்? பார்ப்பனர்கள் நாம் படிக்கக்கூடா தென்று சொல்பவர்கள். படித்தால் வாயில் ஈயத்தைக்காய்ச்சி ஊற்றவேண்டுமென்பவர்கள். கேட்டால் காதில் ஈயம் காய்ச்சி ஊற்றவேண்டுமென்பவர்கள். புத்தர் பெருமான் எல்லா மக்களும் படிக்கும்பொருட்டு 'நாலந்தா' என்ற இடத்தில் ஏழு மாடமாளிகைகளுடன் நிறுவிய பல்கலைக்கழகத்தை ஒரே நாளிரவில் தீமூட்டி அழித்த பாவிகள் பிராமணர்கள். நம் தமிழைக் கொல்பவர்கள், நம் நாட்டையும் மதத்தையும் பாழ்படுத்துபவர்கள். நம்மை நசுக்குபவர்கள் எல்லாம் பிராமணர்கள். இத்தகைய பாவிகளாகிய பிராமணர்களை "நான் போற்றுகின்றேன்." என்று மகாத்மா ஏன் சொல்லுதல் வேண்டும்? பார்ப்பனர்களைப் போற்றவேண்டுமென்ற எண்ணமிருந்தால் வாயை மூடிக்கொண்டிருக்கலாமே! வாய் விட்டுக்கூறி ஏன் பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கு முட்டுக்கட்டை போடவேண்டும்? வெறும் வாயை மென்றுகொண்டிருந்த பார்ப்பனர்கள் இனி வாளா இருப்பார்களா? அவர்கள் மகாத்மா காந்தி "நான் பிராமணர்களைப்போற்றுகின்றேன்" என்று சொன்னவைகளை ஒன்றுமறியாத மக்கள்பால் எடுத்துக்கூறி இன்னும் சிலகாலம் யோசம் செய்வார்களே! பார்ப்பனர்களின் மோசத்திற்கு மகாத்மா துணைபுரிந்தது பற்றி நாம் மிகவும் துயருறுகின்றோம்.

இன்று பூனாவிலிருந்து வந்திருக்கும்தந்தியொன்று பூனா பிராமணர்கள் ஆதிதிராவிடர்கள் கணபதி உற்சவத்தில் கலந்துகொள்ளக்கூடாதென்றும், அவர்கள் பிள்ளைகள் தம் சபைக்குள் வந்து விளையாடக்கூடாதென்றும் வழக்கு தொடுத்திருப்பதாய் அறிவிக்கின்றது. இத்தகைய கொடிய பிராமணர்களை மகாத்மா போற்றுகின்றாரென்றால் நம் மனம் எரியாதா?

முன்னொரு முறை மகாத்மா சென்னைக்கு வந்த காலத்துப் பார்ப்பனர்களைக் குறை கூறினார். குறை கூறியவுடன் மறுமுறை சென்னைக்கு வந்த காலத்து பார்ப்பனர்கள் அவரை எதிர் கொண்டழைக்கவில்லை. அதனால் இப்பொழுது பிராமணர்களைப் புகழ்ந்தாரா? அல்லது இப்பொழுது பிராமணர்களுக்குள்ள "அயோக்கியர்கள்" என்ற பட்டத்தைப் போக்கடிப்பதற்காக இவ்வாறு சொன்னாரா? பார்ப்பனர்கள் எத்தனை மகாத்மாக்களை இழுத்துக் கொண்டு வந்தாலும் "அயோக்கியர்கள்" என்ற பட்டத்தை ஒரு சிறிதும் மாற்றிக்கொள்ள முடியாது என்பதை மட்டும் அறிவுறுத்துகின்றோம். இன்னும் மகாத்மா என்ன பார்ப்பனப்பிரசாரம் செய்கின்றாரென்று பார்ப்போம்.

ஸ்ரீமான் நாயக்கர்.

நேற்று 10-9-27ம் தேதி இரவு மெயிலில் சென்னைக்கு சென்றுள்ளார். "திராவிடனை" ஏற்றுக்கொள்ளும் விஷயம் அவர் விருப்பப்படி முடிந்தால் சுமார் மூன்று மாதம் சென்னையில் தங்கியிருப்பார். அவசரமாயும், சொந்த விஷயமாயும் எழுதும் கடிதங்கள் — ஈ. வெ. ராமசாமி, C/o திராவிடன், மவுண்ட் ரோடு சென்னை — என்ற விலாசத்திற்கும், தந்தியனுப்புபவர்கள் — ராமசாமி C/o ஜஸ்டிஸ், சென்னை — என்ற விலாசத்துக்கும் எழுதிஅனுப்பக்கோருகிறோம்.

6ம் பக்கத்தொடர்ச்சி

ராயத்திற்கு"ம் பிரதிநிதியானவர். கவர்னர், வைசிறாய், மகாத்மா காந்தி முதலிய பிரபுக்களிடம் நமக்காகப் பேசுபவர், நாளைக்கு நமக்கு என்னவேண்டும் என்பதற்கும் திட்டம் போடுபவர்.

நிற்க, இந்த மாதிரியான பெரிய பொறுப்புவாய்ந்த இந்த நமது "தலைவருக்கு" சாப்பாட்டிற்கு கொடுத்துக்கொண்டு வருபவர் யார்? அவர் யோக்கியதை என்ன? இவர்களை தலைவர்களாக்குகிற பத்திரிகைகள் எவை? அவைகளின் யோக்கிய பொறுப்பு எவ்வளவு? இவைகளையெல்லாம் நாட்டுமக்களிடம் அறிமுகப்படுத்தி பின்பற்றுவோர்களையும் சம்பாதித்துக் கொடுக்கும் ஆசாமிகள் யார்? அவர்கள் யோக்கியதை என்ன? அவர்களுக்கு மாதச் சம்பளம், மொத்தக்கூலி, எவ்வளவு? கொடுப்பவர் யார்? அவர் யோக்கியதை என்ன? இவைகள் எல்லாம் மகாத்மாவுக்கு தெரியுமா? ஏதாவது சில தெரிந்திருந்தாலும் அவற்றை வெளியிலெடுத்துச் சொல்லவோ நடவடிக்கைகளில் காட்டவோ, மகாத்மாவுக்கு தைரியம் உண்டா? இந்தமாதிரியான கூட்டத்தாரைத் தவிர வேறு யாருக்காவது மகாத்மாவை அறிமுகப்படுத்தக்கூடிய நிலைமை ஏற்படமுடிந்ததா? என்பதான விஷயங்களை ஒரு மனிதன் நடு நிலைமையில் இருந்து யோசித்துப் பார்ப்பானானால் நாட்டிற்கு ஏற்பட்ட கஷ்டகாலத்தை உணரமுடியாமல்போக நியாயமில்லை.

தவிர, இந்தமாதிரியான காங்கிரசையும் அரசியலையும் ஏற்றுக்கொள்ளாதவர்களை (பார்ப்பனரல்லாத கக்ஷியாரை) நமது நாட்டில் இந்த காங்கிரஸ் கூட்டத்தார் (பெரும்பாலும் பிராமணர்கள்) தேசத்துரோகிகள் என்றும், ஏழைமக்களின் விரோதிகள் என்றும், சுயராஜ்ய விரோதிகள் என்றும், பேசினதும் எழுதினதும் பிரசாரம் செய்ததும் இனியும் செய்து கொண்டிருப்பதும் யாரும் அறியாததல்ல. இம்மாதிரியான கூட்டத்திலும் நமது நாட்டுப் பெரும்பான்மை மக்களான பார்ப்பனரல்லாதார் சிலரும் சேர்ந்து கொண்டு கூத்தாடுவதும் யாவரும் அறிந்ததே. அக்கூட்டத்தில் ஒருவரான ஸ்ரீமான் ஜார்ஜ் ஜோசப்பு அவர்களின் விஷயமாகவே இந்த வியாசம் எழுத முன் வந்தோம்.

ஆதாவது ஸ்ரீமான் ஜார்ஜ் ஜோசப்பு அவர்கள், நமது நாட்டு பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கு விரோதமாய் பார்ப்பனர்களால் சென்னை மாகாண சங்கம் என்பதாக பத்து வருஷங்களுக்கு முன் ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்ட காலத்தில் தனது பெயரை பார்ப்பனர்களுக்கு கொடுத்தவர். அன்றியும இவர் மாத்திரமல்லாமல் இவரோடு கூடவே ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடு, கல்யாணசுந்தர முதலியார், சக்கரை செட்டியார், ஆரியா, தண்டபாணி பிள்ளை முதலிய மற்றும் சில கனவான்களும் இக்கூட்டத்தில் சேர்ந்தவர்கள். இவர்களில் ஸ்ரீமான் ஜோசப்பு தவிர ஏறக்குறைய மற்றெல்லோரும் பார்ப்பனர்களின் சூழ்ச்சியையும் தங்களது அறியாமையையும் உணர்ந்து ஒவ்வொருவராக பார்ப்பனர்களை விட்டு வெளிவந்து பார்ப்பனர்களின் யோக்கியதையையும் வெளியாக்கிவிட்டார்கள். சிலர் மறுபடியும் மறுபடியும் அங்கொருகால் இங்கொருகாலுமாகவும் இருக்க வேண்டி இருந்தாலும், உண்மையை அறிந்து கொண்டதாகவும், தங்கள் குற்றத்தை உணர்ந்து கொண்டதாகவும், தாராளமாய் வெளிப்படுத்திவிட்டார்கள். எனினும் சிலர் இம்மாதிரி அங்கொருகாலும் இங்கொருகாலுமாய் இல்லாமல் வாழமுடியாத நிலைமையில் தங்களது வாழ்க்கையை சிக்கவைத்துக்கொண்டார்களானதால் அதிகமான கெடுதி அவர்களால் ஏற்படாதிருக்கும் வரையில் இடம் கொடுத்துக்கொண்டு வரவேண்டியதுதான் என்பதே நமது அபிப்பிராயம்.

ஆனால் ஸ்ரீமான் ஜோசப்புக்கு மாத்திரம் பார்ப்பனர்களின் யோக்கியதை தெரிந்திருந்தாலும், தன்னால் பார்ப்பனர்களை ஏமாற்ற முடியாது என்பதையும் தன்னைவிட பார்ப்பனர்கள் கெட்டிக்காரர்கள் என்பதையும் அறிந்துகொள்ள இதுவரை சந்தர்ப்பமே கிடைக்காமல் போய்விட்டது.

நல்லவேளையாய் இப்போது அவருக்கு கிடைத்து விட்டது. அவர் அசோஸியேட்டட் பிரஸ் இடம் சொன்னதாவது:—

"......காங்கிரஸ்காரர் என்று சொல்லிக்கொண்டு காங்கிரசினிடம் விஸ்வாசம் காட்டாதவர்களும் எனக்கு நேர்விரோதமாய் வேலைசெய்தவர்களும் பார்ப்பனர்கள்தான் ....மதுரைப் பார்ப்பனர்கள் தாங்கள் வகுப்பு வாதிகள் அல்ல என்று சொல்லுவது சரியல்ல.

காங்கிரஸ் கமிட்டியார் ஒரு பார்ப்பனரைத் தள்ளிவிட்டு என்னை தெரிந்தெடுத்ததால் காங்கிரஸ் பார்ப்பனர் எனக்கு ஓட்டு செய்யவில்லை................"

இந்த மூன்று வாக்கியங்களிலிருந்தே அவரது அபிப்பிராயம் என்ன என்பது வெளிப்படை. அதாவது பார்ப்பனர்கள் காங்கிரசிடம் பக்தி இருப்பதாய் காட்டிக்கொள்வதெல்லாம் மோசடி என்றும், பார்ப்பனர்கள் தங்கள் சுயநல வகுப்புவாதிகள் என்றும, பார்ப்பனர்களுக்கு ஓட்டுகிடைப்பதற்காகத்தான் காங்கிரசை உபயோகப்படுத்திக்கொள்ளுகிறதே தவிர வேறு காரியத்திற்கல்ல என்றும் தாராளமாய் அபிப்பிராயப்பட்டு இருக்கிறார் என்பது தான்.

ஆனால் இதோடாவது பார்ப்பனர்களை விட்டு விலகுவார் என்று பார்த்தால் ஒருகாலும் விலகமாட்டார் என்றே சொல்லுவோம். ஏனென்றால், இதற்கு சமாதானமாக வேறு ஏதாவது தனக்குச்செய்துவைப்பார்களா இல்லையா என்று கொஞ்சம் காத்திருந்துப் பார்ப்பார்போல் தோன்றுகிறது. எப்படி என்றால், தான் இனி என்ன செய்யப்போகிறார் என்கிற முடிவு சொல்ல இன்னும் கொஞ்சம் சமயம் வேண்டுமாம். "நல்ல மாட்டுக்கு ஒரு சூடு, நல்ல பெண்டாட்டிக்கு ஒரு வார்த்தை" என்பதாக ஒரு பழமொழியுண்டு. அதுபோல் ஸ்ரீமான் ஜோசப்பு அவர்களுக்கு யோக்கியமான முறையில் இரண்டுவழிதான் உண்டு. ஒன்று வகுப்புவாதிகளையே விட்டு விலகவேண்டும். அந்தப்படி வகுப்பு வாதிகளை விட்டு விலக முடியாவிட்டால் உலகத்திலுள்ள எல்லா வகுப்புக்காரர்கள்கண்களிலும் மிளகாய்த்தூளை தூவிவிட்டு தங்கள் வகுப்பாரே வாழவேண்டுமென்கிற—தான் கண்டுபிடித்த—பார்ப்பன வகுப்புவாதிகளை விட்டுவிட்டு, எல்லா வகுப்புக்காரர்களும் வாழவேண்டும், ஒரே வகுப்பாரே ஏகபோகமாய் வாழக்கூடாது என்கிற கூட்டத்தாருடன் சேரவேண்டும். அப்படிக்குமில்லாமல், இப்படிக்குமில்லாமல், இனியும் பார்க்கலாம், இனியும் பார்க்கலாம், என்று சொல்லிக்கொண்டு பார்ப்பனர் தின்ற மீதி எச்சைக்கு காத்துக்கொண்டிருப்பது மனிதத்தன்மை ஆகாது என்பதே நமது அபிப்பிராயம்.

ஆனால் ஸ்ரீமான் ஜோசப்பு அவர்கள் அப்படிச்செய்யமாட்டார் என்றே நினைக்கிறோம். ஏனென்றால், ஸ்ரீமான் ஜோசப்பு போன்ற மனப்பான்மை உடையவர்களுக்கு நமது நாட்டில் பார்ப்பனர்களைத்தவிர வேறு புகலிடம் கிடையாது. பார்ப்பனரல்லாதார் கூட்டத்திற்கு வந்தால் இவருக்கு திடீரென்று ஒரு தன்மையும் ஏற்பட்டுவிடமுடியாது. இவருக்கு முன்னால் எத்தனையோ பேர்கள் வெகு நாளாய் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வந்த பிறகுதான் இவருடைய பங்குக்கு சமயம் வரும். ஆதலால் ஸ்ரீமான் ஷண்முகம் செட்டியாரைப்போல் மன்னிப்புக்கேட்டுக்கொண்டோ அல்லது மற்றவர்களைப்போல் தாங்கள் பேசியவைகளை மறுத்துவிட்டோ அல்லது வேறு வியாக்யானம் செய்தோ, மறுபடியும் பார்ப்பனர்கள் காலில் நுழைந்துதான் தீரவேண்டும்.

எனவே ஸ்ரீமான் ஜோசப்பவர்களுக்கு ஏற்பட்ட இந்த அனுபவத்தால் மனிதத்தன்மைக்கோ சுயமரியாதைக்கோ ஒருவித லாபமும் ஏற்பட்டு விடாது என்பதே நமது அபிப்பிராயம.

மகாஜனங்களுக்கு ஒரு எச்சரிக்கை.

அண்ணாஜி என்கிற ஒருவர் எங்கள் கதர் லாகா ஏஜண்டு என்று சொல்லிக்கொண்டு வெளியூர்களில் எங்களுக்காக ஆர்டரும் அட்வான்சும் வாங்கி வருவதாக சில வியாபாரிகள் எழுதியிருக்கிறார்கள் இதைப் பற்றிய விபரம் ஒன்றும் எங்களுக்கு தெரிவிக்கப்படவில்லை. கீழ்க்கண்ட எங்கள் விலாசத்திற்கு அட்வான்ஸ் வாங்க யாதொரு ஏஜண்டுக்கும் அதிகாரம் கொடுக்கவில்லை. ஆதலால் எங்கள் ஏஜண்டென்று சொல்லிக் கொண்டு யாராவது வந்தால் அவர்களிடம் எங்களுக்காக அட்வான்ஸ் கொடுத்து ஏமாந்து போகக்கூடாதென்றும், அப்படிக்கொடுத்தால் அதற்கு நாங்கள் உவாப்தாரியாக மாட்டோமென்றும எச்சரிக்கை செய்கிறதுடன் சரக்கு தேவையானவர்கள் ஆர்டரும் அட்வான்சும் நேராக எங்களுக்கே அனுப்பவேண்டுகிறோம்.

வ. அ. முருகேச முதலியார்,
கதர் ஜவுளி வியாபாரம்,
வள்ளிபுரம, ஈரோடு.

சேலம் டிஸ்டிரிக்ட் கலெக்டர் அவர்கள் சமூகத்திற்கு ஊத்தங்கரை தாலூகா ஆதிதிராவிட குடிகள் வணக்கமாய் எழுதிக்கொண்ட விண்ணப்பம்.

அய்யா,

இந்த ஜில்லாவில் ஆதித் திராவிடர்களின் ஜனத் தொகை 1¾ லட்சம். அதில் இந்த தாலூகாவில் எங்கள் ஜாதியார் 30 ஆயிரம் பிரஜைகள்.

ஆதித் திராவிட வகுப்பார் அதிக ராஜவிசுவாசப் பற்றுள்ளவர்களென்பதும், யுத்த காலத்தில் உயிர் கொடுக்கத் துணிந்தவர்களென்பதும், ஆங்கில தேசத்திலிருந்து அரசபிரான் பிரதிநிதிகளாக கவர்ன்மெண்டு காரியங்களை நடத்தி வரும் ஆங்கில அதிகாரிகளுக்கும் அவர்கள் குடும்பத்தாருக்கும் இவர்களுடைய தொண்டும், விஸ்வாசமும், உழைப்பும் இல்லாதவரையில் இந் நாட்டில் ஆங்கில பிரபுக்களுடைய லௌகிக சௌகரியங்களையும் ஏவலையும் மற்றைய வகுப்பார் காப்பாற்ற முடியாது என்பதும் கவர்ன்மெண்டார் அறிந்த விஷயம்.

2. அன்றியும் ஒடுக்கப்பட்ட வகுப்பார்களாகிய எங்களிடம் கவர்ன்மெண்டார் அதிக ஆதரவு காட்டுவதாகவும், எங்கள் வகுப்பார் முன்னேற்றத்திற்கு வேண்டிய வாசிப்பும் பல துறைகளில் கவர்ன்மெண்டு உத்தியோக நியமனங்களும் கொடுத்து ஆதரிப்பதாகவும், விளம்பர மூலியமாக அடிக்கடி வெளியிடுவதாக தெரிகிறது.

3. இதனால் நாங்கள் கண்ட பயன் யாது? ஆதித் திராவிடர் என்று ஒரு பெயர் கொடுத்திருப்பது தான் கண்டது. இதை "பறையன்" என்ற இழிவான பெயரை மாற்றிக்கொள்வதற்கு அனுகூலமானதென்று கவர்ன்மெண்டார் நினைத்திருக்கலாம். "பறையன்" என்று சொல்லிக் கொண்டிருந்த காலத்தில் அவ் வார்த்தைகளுக்கு என்ன "பொருளும்" "தத்துவமும்" இருந்ததோ அப்படியே இப்போதும் இருப்பதுமல்லாமல "அரசகாரியங்களில்" ஆதரவு குறைந்து வருகிறதென்பதே எங்கள் அனுபவத்தில் ஏற்பட்டு இருக்கிறது.

4. திருஷ்டாந்தமாக எங்கள் மக்களில் கிராம உத்தியோகஸ்தர் வேலைகளுக்காவது தாலூகா கச்சேரிகளில் "அட்டண்டர்கள்" "சேவகர்கள்" முதலிய வேலைகளுக்காவது "பாரஸ்ட்டு கார்டுகள்" முதலிய வேலைகளுக்காவது போதுமான வாசிப்புள்ளவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் எத்தனையோ விண்ணப்பங்கள் போட்டும், கவனிப்பவர்களே இல்லை.

5. இந்த தாலூகாவில் சுமார் 300 கிராம முன்சீபுகள் ஸ்தானமும் கிட்டதட்ட 150 கிராம கர்ணங்கள் ஸ்தானமும் இருக்கின்றன. அதுபோலவே தாலூகா ஆபீசு, டிப்டி தாசில்தார் ஆபீசு, பாரஸ்ட்ரேஞ்சு ஆபீசு இருக்கின்றன. இவைகளில் எத்தனைபேர்கள் இருக்கின்றார்கள் என்று கவர்ன்மெண்டார் விசாரணை செய்து திருப்தி செய்து கொள்ளவேண்டியது அவசியமான விஷயமாய் இருக்கிறது.

ஒரு கிராம உத்தியோக வேலைக்கு விண்ணப்பங்கள் போட்டால் விண்ணப்பதாரர்களை கச்சேரியிலிருக்கும் குமாஸ்தாக்கள் விசாரணை செய்கிறார்கள். இவர்களோ பெரும்பாலும் உயர்ந்த ஜாதியாரென்றும், உயர்ந்த வகுப்புள்ளவர்களென்றும் சொல்லிக் கொள்ளும் கூட்டத்தார். இவர்களால் எவ்வளவு தூரம் எங்களுக்கு நியாயம் கிடைக்கும் என்பது நாங்கள் சொல்லாமலே தங்களுக்குத் தெரியலாம்.

7. கிராம முன்சீப் வேலையென்று கேட்கும்பொழுது, கிராமத்தில் அதிக சொத்தில்லையென்றும், அது இருந்தால கிராம முனிசீப் பரிக்ஷையில் தேறவில்லையென்றும், போதுமான படிப்பில்லையென்றும் சொல்லப்படுகிறது. கர்ணம் வேலை கேட்கும் பொழுது டெஸ்ட்பாஸ் செய்ய வில்லையென்றும் நடத்தக்கூடிய திறமையில்லையென்றும் சொல்லப்படுகிறது.

8. உண்மையில் எங்களுக்கு உதவி செய்யவேண்டுமென்ற காருண்யமுள்ள நிலைமை உத்தியோகஸ்தர்கள் யாராவது இருந்தாலும், அந்த ஆபீஸ் குமாஸ்தாக்களாலும், ரெவன்யூ இன்ஸ்பெக்டர்களாலும், காட்டும் சில காரணங்களால் எங்களை கைகழுவ விட்டு விடப்படுகிறது.

9. சுருக்கமாய்ச் சொல்லும் பட்சத்தில் இது விஷயத்தில் எங்கள் விண்ணப்பங்களைப் பற்றி வழக்கமாயும் சுலபமாயும் சொல்லும் காரணங்கள் என்ன என்பது யோசிப்போம்.

எங்களுக்கு கிராமத்தில் சொத்தில்லையென்பது முதலாவது காரணம். கவர்ன்மெண்டு சொத்துக்களைக் காப்பாற்றி வருவதில் நம்பிக்கையுள்ள ஒரு வகுப்பு தமிழ் நாட்டில் இருக்குமானால் அது ஆதி திராவிடரென்பது கவர்ன்மெண்டார் ரிகார்டு மூலியமாய் ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம். அன்றியும் அவர்கள் இதுவரையில் சர்க்கார் பணத்தை எடுத்துக்கொண்டு அபகரித்து விட்டதாகவாவது, ஜெயிலுக்குப் போனதாகவாவது ஏற்படவில்லை. அதிக சொத்தில்லாவிட்டாலும் சாமான்ய சொத்தும் வாசிப்பும் நடவடிக்கையும் உள்ளவர்களுக்கும் கூட இந்த விதமான சாக்கை ஒரு காரணமாக சொல்லிகாலம் கழித்து வருவது பொருத்தமானது என்பது கவர்ன்மெண்டார் யோசிக்க வேண்டிய விஷயம்.

டெஸ்டு பாஸ் செய்யவில்லை அல்லது போதுமான வாசிப்பில்லை என்பது இரண்டாவது காரணம். இதனால் இப்போது இருக்கும் ஒவ்வொரு கிராம உத்தியோகஸ்தரும் பாஸ் செய்தவன் என்று ஏற்படுகிறது. இது முழுதும் உண்மையான நடவடிக்கைக்கு விரோதமான விஷயம். அதிகாரிகள் ஒருவனுக்கு வேலை கொடுக்க இஷ்டமிருந்த இடங்களில டெஸ்டு பாஸ் செய்ய வாய்தாவும் கொடுக்கிறார்கள். ஆனால் இத்தகைய தயாளகுண அபிப்பிராயத்தை எங்கள் விஷயத்தில் காட்டாமைக்கு நாங்கள் செய்த குற்றம் எங்கள் மக்கள் படித்திருந்தாலும் பறையனாலேயே தென்னாட்டில் தீண்டப்படாதவராய் நினைப்பதேயாகும்.

கர்ணம வேலை கொடுக்கும்படி நாங்கள் கேட்டால், எங்களுக்குப் போதுமான திறமை இல்லையென்று சொல்லி விடுகிறார்கள். இதற்கு எல்லையுமில்லை அளவுமில்லை. 'போதுமான திறமை இல்லை' என்பது பொதுவான வார்த்தை. அது எப்படி என்பதற்கு வியாக்கியானம் பிறர் கொடுக்கக்கூடிய மாதிரியிலுமில்லை. இதைவிட வேலை கொடுக்க தங்களுக்கு இஷ்டமில்லையென்று எழுதிவிட்டால் தகராறே கிடையாது. இது மெய்யானால் இப்போது வேலையிலிருக்கும் எல்லா வர்ணங்களும் "காரிய குந்தகமில்லாமல் செய்கிறவர்களாக" கவர்ன்மெண்டார் ஒரு முடிவுக்கு வரும் பக்ஷத்தில் ஒவ்வொரு ஜமாபந்தியிலும் ஹூஜூர் உத்தியோகஸ்தர்கள் ஜமாபந்தி கணக்கு செக்கு செய்யும்போது திருட்டு எழுத நேரிடும் காலதாமதமும், அலைச்சலுக்கும் தொந்தரவுக்கும் காரணம் யாது என்பதை கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது.

இத்தியாதி காரணங்களைக் காட்டி நாங்கள் உத்தியோக விஷயங்களிலிருந்து ஒதுக்கப்பட்டிருப்பதால் எங்கள் குறைகளை தாங்களாவது கவனித்து ரெவின்யூ டிபார்ட்மெண்டில் இந்த தாலூக்காவில் ஆதி திராவிடர்களுக்கு சில கிராம உத்தியோகங்களையும் தாலூகா கச்சேரிகளிலும், பாரஸ்ட் முதலிய டிபார்ட்டுமெண்டுகளிலும் எங்கள் வாசிப்புக்கு தகுந்தபடி நாங்கள் சுதாரிக்கக்கூடிய உத்தியோகங்களையாவது கொடுக்கும்படி எல்லா கீழ் அதிகாரிகளுக்கும் உத்திரவு போடும்படி கேட்டுக் கொள்கிறோம்.

"ஊத்தங்கரை ஆதி திராவிட குடிகள்."

குறிப்பு:- இவ்வித குறைகளைப்பற்றி சர்க்காராவது சட்டசபை மெம்பர்களாவது கவனிப்பார்களா? ப-ர்.

முன் விலை ரூ. 14. இப்பொழுது ரூ7.
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்
கைக்கடியாரங்கள்

மேற்கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனமாய்ச் சேர்த்து அனுப்பப்படும் 5 வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

இனம்! இனம்
முனையில் இரிடியம் உள்ள 14 Kt.
தங்க நிப்பு போட்ட Self-filling
பௌண்டன்பேனா இனம்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5 வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE.
George Town, Madras.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

தும் நீங்கள் அவர்களுக்கு வாழ்த்துக்கூறுவதும் எந்தப்பழக்கம். பிள்ளை பந்துவையெல்லாம், பல தொழிலுக்கு பல ஊர்களுக்கு அனுப்பிவிட்டு திண்ணையிலிருந்து ஆசாரம் பேசும் பார்ப்பானுங் கூட அவன் வீட்டில் பிள்ளைகளுக்குப் பிணி வந்தால் மாட்டுக்கொழுப்பிற்கும் மயில் காலிற்கும் பன்றி நெய்க்கும் முசலை வற்றலுக்கும் சேரிக்குப் போய் வருகிறான். மேனாட்டுப் பழக்கமுடைய உயர்ந்த ஜாதியில் சிலருக்கு மாட்டு நாக்கும் பன்றி ஈரலும் டர்க்கியென்னும் வான்கோழியின் இடது மார்பின் எலும்புதான் அதிகப் பிரியமென்று பீச் ரோட்டில் இங்கிலீஷ் படித்தவர்கள் பேசிப்போவதை நீங்கள் கேட்டதில்லையா? முறுக்கும் சீடையுமல்லவா முன் பலகாரம். ரொட்டி கேக், பன், பிஸ்கெட், சாக்கிலெட் பப்பிரமெட் இவைகளைச் செய்கிறவர்கள் உங்கள் தாய்வழியா தந்தை வழியா. நீராகார தண்ணீரும் மோருமல்லவா முன் குடி நீர். வீட்டிலும் ரயிலிலும் வெளியிலும் 'ஓக்ஸ்' வேண்டாம் 'மெகஞர்' தேவையில்லை, 'பென்சர்' சோடாவே வேண்டுமென்கிறீர்களே. அது செய்கிறவர்கள் இதுவரையிலும் உங்களை நரகத்திற்கு அனுப்பவில்லையே. முன் ஆட்டுப்பாலும் மாட்டுப்பாலுமல்லவா நம் குழந்தைகளுக்கு ஆகாரம். மேனாட்டுப் பாலெனச் சொல்லும் எல்லாப்பாலும அவர்கள் ரசாயன சாஸ்திரமும் மல்லவா இப்பொழுது நம் குழந்தைகளை வளர்க்கிறது. மாட்டு மாம்ச சத்தும் மாட்டுக்கன்றின் கால் கொழுப்பால் செய்த மாத்திரையும் கோழிக்குஞ்சு சூப்புமல்லவா இப்பொழுது நாம் புஷ்டிக்குச் சாப்பிடும் மருந்தாயிருக்கிறது. நாம் சாப்பிடும் இங்கிலீஸ் மருந்து புட்டிகளிலிருக்கும் மருந்து இன்னதென்று நமக்கும் தெரியாது. நமது டாக்டர்களுக்கும் தெரியாது. நமது பாட்டன் வம்சத்தவர்கள் செய்து அனுப்பியிருக்கிறார்களென்னும் அபிமானத்திலா அவசியத்திலா சாப்பிடுகிறோம். இத்தியாதி அநேக காரியங்கள் நம் அவசியத்திற்கு வந்து பழைய பழக்கங்களெல்லாம் பாழாய்ப் போய் நம் அவசியத்திற்கும் லாபத்திற்கும் எந்த இழிவானதையும் செய்து வரும் நாம் ஆதிதிராவிடப் பிள்ளைகளிடம் தீட்டுக்காண்பது யோக்கியமா? சத்தியத்திற்கு விரோதமாய் தீட்டுக்கண்டாலும் அவன் பட்லர் ஆகிவிட்டால் நித்தியம் காலையில் அவன் கையையும் குலுக்க வேண்டும். நம்மையிலும் கைபோட வேண்டும்.

நாள் முழுவதும் செய்யும் உலக விவகாரங்களை கர்ம காண்டமென்றும் கற்பனைகளை கடவுளென்றும், மத மென்றும் சொல்லி ஏமாற்றி அதிலேயே அழுந்தியிருந்துவிட்டு சாயங்காலத்தில மூச்சை யிழுப்பதாக கண்ணைமூடி விரலில் கோட்டை எண்ணித் தண்ணீரை இறைத்தால் ஆகாசத்திலிருந்து கடவுளோ ரிஷிகளோ குதித்துவிடுவார்களா. இந்த அயோக்கிய மடையன் செய்யும் மந்திரத்தை கவனிப்பதுதானா அவர்கள் வேலை. இதைவிட மௌடீகமும் ஏமாற்றுமுண்டா! இதனால் வரும் உயர்ந்த ஜாதியும் பெருமையும் எத்தனை நாள் நிற்கும். அடிமையிலும் அடிமையாகி புத்தி பாழடைந்து கொஞ்சங்கூட சிந்தனாசக்தி இல்லாமல் கிடக்கும் நம் தேசத்தில இவர்களுக்கும் மதிப்பு இருந்தே தீருகிறது. இனியும் கொஞ்ச நாளையில் இவ்வுண்மையைக் 'குடி அரசு' வெளிப்படுத்தும். சுத்த சத்தியமும் மனத்தூய்மையுமான இருதயமும் முதல் முதல வேண்டும். அதற்கு உலகமெலாம் நிறைந்த விராட் ரூபத்தைப் பூசிக்கவேண்டும். நம்மைச் சுற்றிலுமுள்ள மனிதர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் ஏழைகளுமே அந்த விராட் ரூபம். ஆகவே அந்த ரூபத்தைப் போற்றுங்கள். அவர்களே உங்களுக்கு தெய்வம். ஒருவனுக்கு உரியது மற்றவனுக்குமுரியதுதான். உன்னிடமுள்ள அதே கடவுள்தான் என்னிடமுமிருக்கிறார். அதுதான் ஒவ்வொருவரும் அறியவேண்டியது. ஒரே மதத்தில் ஒருவருக்குத் தனிமத உரிமை கூடாது. எல்லோருக்கும் சமமாயிருக்கவேண்டும். ஒவ்வொருவனுக்கும் தன்னிடத்தில் தெய்வத்தன்மையும் சக்தியுமிருக்கிறதென்று கற்பிக்கவேண்டும். அந்தபடி இருப்பதாக மற்றவனும் அறியவேண்டும். அவன் கடவுளால் அடையவேண்டியதையோ முக்தியையோ தானே தேடிக்கொள்ளுவான். மத்தியில் துபாஷி வேண்டியதில்லை. துபாஷி என்பது அத்தனையும் புரட்டுத்தான். இதற்காக முதல் முதல் வேண்டியது சுவாதந்திரியமே. அபிவிருத்திக்குத் தடையாயிருக்கிற புரோகிதப் புரட்டை முதலில் விரட்டோட்டுங்கள். இதுவே நம்மைத் துர்ப்பலமாக்கி விட்டது. மனிதன் மனிதனை பல சாஸ்திர புரட்டால் அடிமையாக்கிவிட்டான். அதனால் அநேக காலமாக கோழைகளாகி அழுதது போதும். அழுகை இதனுடன் போதும். இனியாவது சுயமரியாதையைப்பெற்று எழுந்து ஆண்மக்களாகுங்கள். இதுதான் 'குடியரசு' உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறது.

கோயமுத்தூர் ஜில்லா குடியானவர் சங்க நடவடிக்கை.

1927 வருஷம் ஆகஸ்டு மாதம் 19 தேதியில் கூடிய கோயமுத்தூர் ஜில்லா குடியானவர்கள் சங்கத்தின் நிர்வாக சபையின் மீட்டிங்கில் நடந்தேறிய விஷயங்கள்.

ஆஜர்,

மகா-ள-ள-ஸ்ரீ ராவ் பகதூர் நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார் அவர்கள் ராவ் பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்கள் எம். எல். சி. வி. வெரிவாட செட்டியார் அவர்கள் கே. என். நஞ்சப்ப கவுண்டர் அவர்கள் பி. எஸ். ஜி. வெங்கிடசாமி நாயுடு காரு வி. சி. வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்கள்.

1. ஒவ்வொரு தாலூகாவிலுமுள்ள குளம், குட்டை, வாய்க்கால் முதலிய நீர்ப்பாய்ச்சல் ஆதாரங்களின் சீர்கேடுகளைப்பற்றி அங்கங்கே உள்ள குடித்தன பிரமுகர்கள் இச்சங்கத்தின் மூலியமாய் சர்க்காருக்குத் தெரியப்படுத்தி மராமத்துக்கள் செய்விக்க வேண்டிய ஏற்பாடுகளை செக்ரிடேரி செய்ய வேண்டுமாயும்,

2. பாரஸ்டுக்குச் சம்பந்தமுள்ள குடித்தனக்காரர்களும், அங்கே ஏற்பட்டிருக்கும் பாரஸ்டு பஞ்சாயத்துக்களும், மேய்ச்சல் வசதிகள், விறகு, குடித்தனத்துக்கு வேண்டிய இதர சாமான்கள், முதலியன கிடைக்கும் வசதிகள் இவைகளைப்பற்றி பாரஸ்டு அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவும், மற்றும் வேண்டிய விஷயங்களைப்பற்றியும் இச்சங்கத்துக்கு தெரிவித்துக் கொள்ளும்படியாகவும் வேண்டிய ஏற்பாடுகளை செக்ரிடேரி செய்ய வேண்டுமாயும்,

3. நீர்ப்பாசன விஷயமான கஷ்டங்களைப்பற்றித் தெரிவிக்க வேண்டியதைப் பற்றி வேண்டிய ஏற்பாடுகளை செக்ரிடேரி செய்ய வேண்டுமாயும்,

4. சங்கத்தின் காரியங்களை நடத்த ரெவின்யூ சம்பந்தமான அனுபோகம் உள்ள உத்தியோகஸ்தர் ஒருவரை மாதம் 1-க்கு ரூ. 50 — 2 — 60 வரை சம்பளத்தில் நியமிக்கலாமென்றும் இதைப்பற்றி உள்ளூர் பத்திரிகைகளிலும்; மற்றவிதமாயும் பகிரங்கப்படுத்த வேண்டுமாயும்.

5. சங்கத்திற்கு ஒரு இடம் வேண்டியதைப்பற்றி பின்னால் யோசிக்கலாமென்பதாயும்,

6. (S. P. C. A.) ஜீவ ஹிம்சை நிவாரண சங்கத்து இன்ஸ்பெக்டர்களால் சார்ஜ் செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்பட்ட பிராணிகளுக்குகால் நடை ஆஸ்பத்திரியில் கட்டாயமாய் சிகிச்சை செய்து கொள்ள வேணும் என்று இருக்கும் விதியை முனிசிபல் எல்லைக்குள்ளிருக்கும் பிராணிகளுக்கு மாத்திரம் உபயோகிக்கவும், மற்றவர்களுடைய பிராணிகள் தண்டிக்கப்பட்டதன் மேல் அவைகளுக்கு சிகிச்சை செய்ய கால் நடை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகும்படி கட்டாயப்படுத்தாமல் சொந்தக்காரர் இஷ்டப்படி விட்டு விடும்படியாக மேற்படி சங்கத்து அதிகாரிகளைக் கேட்டுக் கொள்ள வேண்டுமென்பதாயும்,

7. சங்கத்திற்கு மெம்பர்களைச் சேர்க்கும் விஷயத்தில் எல்லோரும் பிரயாசை எடுத்துக் கொள்ள வேண்டுமாயும் சங்கத்தின் உபயோகத்தைப்பற்றி செக்ரிடேரி பிரசாரம் செய்ய வேண்டுமாயும்,

8. நஞ்சை நிலங்களுக்கு மூன்றுமாதத்திற்கு குறைவாய் பாயக்கூடிய ஜலாதாரங்களின் கீழுள்ள நஞ்சை நிலங்களுக்கு தண்ணீர் தீர்வை குறைக்க வேண்டும் என்பதாய் குறிப்பான விஷயங்களைத் தெரிந்து கலெக்டரவர்களுக்கு எழுத வேண்டுமாயும்,

குடிமராமத்து சம்பந்தமான வேலைகளை நடத்துவதில் இருக்கும் சீர்கேடுகளைத் திருத்த வேண்டியிருப்பதால் அது விஷயமான முக்கிய விதிகளை தமிழில மொழிபெயர்த்து அச்சுப் போட்டு இச்சங்கத்தின் மெம்பர்களுக்கு அனுப்ப வேண்டுமாயும்,

10. கால் நடை தீவனத்திற்கும் கிணறு வெட்டுவதற்கும் அதிகமான சர்க்கார் கடன் அவசியமாயிருப்பதாய் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்த வேணுமாயும்,

11. நீர்ப்பாசன நிர்வாகங்களில் அனுபவமுள்ள பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டு அதிகாரிகளை மைனர் மேஜர் நீர்ப்பாசனங்களின் ஆட்சி நிர்வாகங்களை ஏற்றுக் கொண்டு நடத்தச் செய்ய வேணுமாயும் இச்சங்கம் அபிப்பிராயப்படுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார்

நாகை தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் சங்க அறிக்கை.

சங்கத்தின் [illegible] ஆண்டு விழாவை பொன்மலையில் நாளது மாதத்திற்குள்ளாக ஸ்ரீமான் சென்னை தோழர் சிங்காரவேல் செட்டியார் அவர்கள் தலைமையிலும், சங்க கட்டட அஸ்திவாரக்கல் நாட்டு விழாவை மகாத்மா காந்தியடிகளைக்கொண்டும் நடத்த தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அவர்களின் சம்மதங்களை அறிந்தவுடன் தேதி அறிவிக்கப்படும். தொழிலாளர்களையும் அபிமானிகளையும் வந்து உதவி செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். T. L. பதமனாபராவ்,
செக்ரடரி.

பிராமணீயம் ஒழிந்த திருமணங்கள்.

1. திருச்செங்கோடு பிரபல வர்த்தகரும், சங்ககிரி தாலூகா போர்டு வைஸ் பிரசிடெண்டுமான, ஸ்ரீமான் டி. ஆர். கந்தப்ப முதலியார் ஜேஷ்ட புத்திரன் சிரஞ்சீவி "பாலசுப்பிரமணியனுக்கும்" ஈரோடு ஸ்ரீமான் முருகப்ப முதலியார் புத்திரி சௌபாக்கியவதி "அம்மணி அம்மாளுக்கும்" திருச்செங்கோட்டில் ஸ்ரீமான் டி. ஆர். கந்தப்ப முதலியாரவர்கள் கிருஹத்தில் பார்ப்பனர்களை நீக்கி குலப்பெரியோர்களைக் கொண்டு திருமணச்சடங்குகள் செய்யப்பட்டு திருமணம் இனிது நடந்தேறியது என்று ஆர். வி. கருப்பண்ண முதலியார் எழுதுகிறார்.

2. நாளது ஆண்டு ஆவணித்திங்கள் பதினாறாம் நாள் வியாழக்கிழமையன்று நாகை பார்ப்பனரல்லாத வாலிப சங்க உபதலைவரும் தாலூகா போர்டு அங்கத்தினரும் திரு. வி. பி. பக்கிரிசாமி பிள்ளை அவர்களின் மருமகனுமான உயர் திருவாளர் எம். ஆர். குப்புசாமி பிள்ளை அவர்களின் திருமணத்தை முன்னிட்டு பார்ப்பனரல்லாத முன்னேற்றத்திற்கும், சுயமரியாதைக்கும் உழைக்கும், உழைத்து வரும் 'ஜஸ்டிஸ்', 'திராவிடன்', 'குடி அரசு'க்கு முறையே ஒவ்வொன்றுக்கும் 2 ரூபாய் நன்கொடை அளிக்கப்பெற்றது. திரு டி.பி. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் நன்கொடையைப் பற்றியும், சுயமரியாதையின் முன்னேற்றத்தைப் பற்றியும் அரிய உரைவழங்கினர். திருமணம் பார்ப்பனரல்லாதாராலேயே தமிழிலேயே வேதம் சொல்லப்பட்டு சிறப்பாக நிறைவேறியது என்று திரு. காளியப்பன் அவர்கள் எழுதுகிறார்.

பிராமணியமொழிந்த திதி.

தஞ்சை ஜில்லா பிராமணரல்லாதார் 6வது மகாநாடு தீர்மானப்படி சுகனூர் (நாகப்பட்டணம் T K) மிராசுதாரும் பிரபல வியாபாரியுமான திரு வீ. த. குப்புசாமி பிள்ளை 25--8--27ல் தனது தாயார் 10-வது வருஷாப்தியத்திற்கு பிராமண புரோகிதரை நீக்கி 100 ஏழைகளுக்கு மேல் அன்னமளித்தார்.

திராவிட ஆதிதிராவிட ஐக்யம்.

இராணிப்பேட்டையிலிருந்து வாலாஜா ரயில்வே ஸ்டேஷனுக்குப் போகும் மார்க்கத்தில் மேட்டூர் என்னும் கிராமத்தில் ஸ்ரீமான்கள் சாமிக்கவுண்டர், சின்னையா கவுண்டர், கன்னி கவுண்டர், முருக கவுண்டர் முனிசாமி ஆகிய திராவிட ஆதித்திராவிடர்கள் சமரச சன்மார்க்கசபை, விநாயகர் ஆலயம் ஆகியவைகள் ஸ்தாபித்து ஆரம்பவிழாவும் கும்பாபிஷேகமும் நடத்தினார்கள். அதுசமயம், திராவிட ஆதித்திராவிடப் பெண்களும் ஆடவர்களும் கூடி அவ்விழாக்களில் தீண்டாமை என்னும் விஷக்காற்று வீசாமல் சிறப்பித்தார்கள் என்று இராணிப்பேட்டை அச்சுதானந்த ஆஸ்ரமத்திலிருந்து திரு சின்மயானந்தா அவர்கள் எழுதுகிறார்.

மதிப்புரை.

இரங்கூன் தனவைசிய இளைஞர் தமிழ்ச் சங்கத்து நான்காவது ஆண்டின் அறிக்கை ஒன்று வரப்பெற்றோம். அதன் வரலாற்றையும் வரவு செலவுக் கணக்கையும் நோக்குமிடத்து இச்சங்கமானது, நாடகம், சொற்பொழிவு, படம், பத்திரிகை, வாசகசாலை இவைகளின் மூலமாக, கல்வி அபிவிர்த்தி, தேகாப்பியாசம், கதராபிவிர்த்தி, பாலியவிதவாவிவாகம், சிக்கனம், ஆகிய துறைகளில், சமூகத்தொண்டும் சமயத்தொண்டும் வெகு ஆர்வத்தோடு செய்து வருவதாகத் தெரிகிறது. ஆகலின் தனவைசிய இளைஞர்கள் இச்சங்கத்தில் அங்கத்தினர்களாகச் சேர்ந்து சமூகத்திற்கும் சமயத்திற்கும் நலன் தேடி உதவவேண்டுமென்று விரும்புகிறோம்.

தனவைசியர்கள் பொருள் தேடும் நோக்கத்தோடு பர்மா முதலிய அயல் நாடுகளுக்குச் சென்றிருந்தும், அவ்விடங்களில் பொருளையே பிரதானமாகக் கருதாமல் சமூகத்தொண்டும் சமயத்தொண்டும் இயற்றிவருவது எல்லாவற்றிலும் போற்றத்தக்கது.

(ப---ர்)

ஆர்ப்பாக்கம்.

(திருவண்ணாமலை தாலூகா)

திதி. இவ்வூர் மிராஸ்தார் திரு. வெங்கிட்டராம ரெட்டியார் சகோதரர் திரு. ர. கோபால் டியார் அவர்கள் சில தினங்களுக்கு முன் தனது தகப்பனாரின் திதியை பார்ப்பனப் புரோகிதத்தை ஒழித்து நடத்தினார்.

கிருஹப்பிரவேசம். ஆவணி மாதம் 13ந் தேதி திங்கட்கிழமை திரு. கோபால் ரெட்டியார் அவர்கள் புதிதாய்க்கட்டிய இல்லத்திற்கு பார்ப்பனர்களை அழைக்காது கிருகப்பிரவேசம் செய்து உற்றார் உறவினர்களுக்கும் ஏழைகளுக்கும் உணவளித்தார்.

திருமணம். ஆவணி 19-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாக்கம் திரு. கோபால் ரெட்டியார் குமாரத்திக்கும் மேகனியூர் மிராஸ்தார் திரு நாராயண ரெட்டியார் குமாரர் போஸ்ட்மாஸ்டர் திரு. கோபால கிருஷ்ண ரெட்டியாருக்கும் பார்ப்பனப் புரோகித மனனியில் திருமணம் நடந்தது.

ரெட்டியார் குலமாணவர்கள் சுயமரியாதை உணர்ச்சி பெற்றது மிகவும் பாராட்டத்தக்கது என்று கண்டு களித்த தரிச்சாபுரம் திரு. ஜி. வெங்கிட்டராம ரெட்டியார் எழுதுகிறார்.

சேலம் ஜில்லா ஊத்தங்கரை தாலூகா மகாநாடு

இம்மாதம் 24-ந்தேதி கூட்டுவதாக ஏற்பாடுகள் நடந்து வருகிறது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

தஞ்சை ஜில்லா இசை வேளாளர் மகாநாடு.

மேல்படி மகாநாடு தஞ்சையில் 16-9-27 தேதியில் கோவை ஸ்ரீமான் ந. லக்ஷ்மண முதலியாரவர்கள் அக்கிராசனத்தில் நடைபெறும். மகாத்மா காந்தியும் நேரில் அழைக்கப்பட்டிருக்கிறார் என வரவேற்புத் தலைவர். ஸ்ரீமான் டி. என். இராஜரத்தினம் பிள்ளை தெரிவிக்கிறார்.

சென்னையில் காலராவைத்தடுக்க கார்ப்பொரேஷன் கமிஷனர் அவர்கள் திட்டம்.

சென்னையில் பரவி வரும் காலரா, வைசூரி முதலிய கொள்ளை வியாதிகளைத் தடுப்பதற்காக சென்னை நகரசபைக் கமிஷனர் ஸ்ரீமான் ச. வெங்கிட்டநாராயணா அவர்கள் செய்த ஏற்பாடுகளைப்பற்றிய குறிப்பு ஒன்று வரப்பெற்றோம். அதில் வைத்திய இலாகா தலைமை அதிகாரிகள் அபிப்பிராயப்படியே தண்ணீரைச் சுத்தப்படுத்துவதற்காகவும், வைசூரி, காலரா பரவிய பாகங்களை சுத்தம் செய்வதற்காகவும், மேற்படி வியாதிகளால் பீடிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சை செய்வதற்காகவும், வியாதி பரவல் தடுக்கவும் நகரசபைக்கமிஷனர் எடுத்துக்கொண்ட முயற்சியும், அநுசரிக்கும் முறைகளும் மிகவும் பாராட்டத் தக்கவைகளாகவே இருக்கின்றன. நகரசபை அங்கத்தினர்கள் நகரத்தின் க்ஷேமத்தில் உண்மையில் அக்கறையுள்ளவர்களாயிருந்தால் நகர க்ஷேமத்தைக் கருதி கமிஷனர் செய்திருக்கும் ஏற்பாடுகளை ஆதரித்து, அவ்வேற்பாடுகள் அமுலில் கிரமமாய் நடைபெறுவதற்கும் உதவியாயிருக்க வேண்டியவர்கள் என்பதே நமது அபிப்பிராயம்.

ஆனால் நகர சபையில் உள்ள ஜனப்பிரதிநிதிகள் என்பவர்களில் சிலர் நகரத்தின் க்ஷேமங்களில் ஒரு சிறிதும் கவலையில்லாமல், கார்ப்பரேஷன் ஸ்தாபனம் பார்ப்பன அக்கிரகாரமாகவும், பார்ப்பனர்களுக்கு உணவளிக்கும் அன்ன சத்திரமாகவும் இருக்கவேண்டுமென்கிற ஒரே கவலையைக்கொண்டு, இதற்கு விரோதமாயிருக்கும் கமிஷனர் ஸ்ரீமான் நாயுடு அவர்களை சதா சர்வகாலமும் அற்பத்தனமான முறைகளில் தாக்கிக்கொண்டும், தொல்லை விஷமங்கள் செய்து கொண்டும், எப்படியாவது அவரை அந்த ஸ்தானத்திலிருந்து மாற்றி ஒரு பார்ப்பனரை அந்த ஸ்தானத்தில் வைத்து தங்கள் காரியங்களை சாதித்துக்கொள்ள வேண்டும் என்கிற கவலையிலேயே கார்ப்பரேஷன் நேரத்தையும் நிர்வாகத்தையும் பாழாக்கி வருகிறார்கள். இவ்வளவும் ஏற்படுவதற்குக் காரணம் ஜனப்பிரதிநிதிகள் என்று சொல்லப்பட்ட கவுன்சிலர்களைத் தெரிந்தெடுக்கும்படியான ஓட்டர்களுக்கு ஓட்டைப் பற்றி போதுமான ஞானமும் கவலையும் ஏற்படாததுதானே ஒழிய வேறில்லை என்றே சொல்வோம். ஆதலால் இனிமேலாவது ஓட்டர்களாகிறவர்கள் தங்களுடைய ஓட்டுகளை உபயோகிப்பதில் பார்ப்பனர்களின் வஞ்சகத்திற்கும், ஏமாற்றுதலுக்கும் காது கொடுக்காமல் யோக்கியமான முறையில் தங்கள் ஓட்டுகளை உபயோகித்து, யோக்கியர்களைத் தெரிந்தெடுத்து முனிசிபல் நிர்வாகம் நாணயமாகவும், யோக்கியமாகவும் நடைபெறுவதற்கு உதவி செய்யும் படி பார்த்துக் கொள்ள வேண்டுமாய் விரும்புகிறோம்.

தர்ப்பைப்புல்லும் கிழிந்த பஞ்சாங்கமும் நம்மை என்ன செய்யும்.

மின்சார ரசம்.

வேத அபூர்வமான மருந்து! ஆச்சரியகரமான குணம்!

இதற்கு இயற்கையாக ஒரு விதமின்சார சக்தியுண்டு

உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம். பத்தியமில்லை அநுபானமில்லை.

மின்சார ரசம் சகல வியாதிகளுக்கும் ஒரு பெரிய வரப்பிரசாதம் என்று அநுபவ சித்தாந்தமாகி ஜனங்கள் தேடியெடுத்து கையாண்டு வரும் அமிர்த சஞ்சீவியாகும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம் மின்சார ரசம் கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியம் இராது. இது இவ்வுலகத்துக்குஓர் ஒப்புயர்வற்ற பரம ஔஷதமாகும். மனிதன் தலை முதல் கால்வரையில் வரும் சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்ற தேன ஜகத் பிரசித்திபெற்றது துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். குழந்தைகள் முதல் வயோதிகர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில் கிடையாது எவ்வித ஆபத்துக்கும் மின்சார ரசம் உதவும் உலகத்தனை நாலு திசைகளினின்றும் ஆயிரக்கணக்கான நற்சாட்சிப் பத்திரங்கள் வந்துகொண்டிருப்பதே இதற்கு போதிய சான்றாகும் இன்றைக்கே எழுதுங்கள். உங்களை ஆச்சரிய முறச்செய்யும். கைகண்ட மருந்து

ஒரு புட்டியின் விலை ரூபா இரண்டே. தபால் சார்ஜ் வேறு.

விலாசம்:—மின்சார ரசக் கம்பெனி லிமிடெட், சேலம்.

நாலு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழுத்த சித்தவைத்யசங்க அங்கத்தவர்!! தமிழ் சித்தவைத்திய சாஸ்திரங்களில் முதல்தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! முப்பு சேர்த்த மருந்துகள்

பழனி. சி. எம் சாமி மகாவீரிய தங்கபஸ்பம்

பச்சிலை மூலிகையினாலேயே நீற்றப்பட்டது. பெரிய மஹான்களின் முறை அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாக்கும் இல்வாழ்வில் அதியற்புத சுகம் தரும். வெள்ளை, வெட்டை. நீர்க்கடுப்பு, நீரழிவு பவுத்திரம், மூலம் க்ஷயம, இருமல் கபக்கட்டு குன்மம் முதலிய சகல வியாதிகளும் தீரும். 48 நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24 நாளைக்கு ரூ. 10.

நற்சாட்சி:—தங்கள் தங்கபஸ்பம் சாப்பிட்டதில் எனக்கிருந்த வாய்வு, வெட்டை பலக்குறைவு முதலியன நீங்கி அபார தாது புஷ்டி உண்டாயிருக்கிறது. இதன் பெருமையையெழுதமுடியாது இன்னும் மேற்படி தங்கபஸ்பம் ஒரு மண்டலத்திற்கு அனுப்பவும். வி. எம். வரதராஜப் பெருமாள்சாமி கவிராயர் பொள்ளாச்சி.

குருஅப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி களைப்பை மாற்றி ரத்தவிர்த்தியையும், தேக புஷ்டியையும், தரும், சகல மேகமும் க்ஷயரோகமும் நீங்கும். தனுக்கற்றது 24 நாள் புட்டி 1-க்கு ரூ, 15 48 நாள் புட்டி 1-க்கு ரூ. 30,

நற்சாட்சி —நான் சிங்கப்பூரில் நீரழிவினால் அதிக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது தங்களுடைய குருஅப்ரேக் செந்தூரத்தை அனுபானத்துடன் சாப்பிட்டதில் என் வியாதி பூராவும் சொஸ்தமாயிற்று இது நீரழிவு வியாதிக்கு மிக உயர்ந்த மருந்தாய்தெரிகிறது. எனது ஸ்னேகிதர் ஒருவருக்கு ஒரு புட்டி குருஅப்ரேக் செந்தூரமும் அனுபானமும வ். பி யில் அனுப்புகோருகிறேன்

கா. முகம்மது அப்துல்காதர் காரைக்கால். 21—12—26.

குருதாளகபஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், சளி, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு, இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சரி, 9-வித காசமும் அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூபா 16.

நற்சாட்சி:—தங்கள் குருதாளகபஸ்பம் ஒரு மண்டலம் சாப்பிட்டதில் இருமல், ரத்த வாந்தி இளைப்பு இவைகள் குணமாயிருக்கிறது ஆர். சந்தையா செட்டிவ் டாக்டர், பாயிண்டு பீட்ரோ சிலோன் 18—9—25.

எல்லா மருந்துகளுக்கும் வி பி. சார்ஜ் பிரத்தியேகம்

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்

C. மலையப்பசாமி. நித்தியானந்த வைத்தியசாலை பழனி, S. I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்;—முநகன் ஏஜன்ஸி 13 அமனைக்காரத் தெரு ஜி. டி. சென்னை

கதர்ப் பத்திரிகைக்கு

வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம்

அல்லது

8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டு இலாகாவாகிய எங்களால் மாதம் இரு முறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய

"குடி நூல்"

என்ற கதர்ப்பத்திரிகையின் வருட சந்தா ஏழை ஜனங்களின் உபயோகத்தை முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

அகில இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லா விவரங்களும் கதரைப்பற்றிய சுதர் பக்தர்களால் எழுதப்பட்ட வியாசம, கதை, கவிதை முதலிய வைகளும் குடி நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது கதரியக்கத்தில் பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,

சர்க்கா சங்கம், ஈரோடு.

உறையூர் அங்கவஸ்திரங்கள்.

அசல் 100 நெ. நூலில் தயார் செய்யப் பெற்றது. பலராலும் நன்கு மதிக்கப் பட்டது. தினப்படி உபயோகத்திற்கு "உறை" கம்பி சதா அங்கவஸ்திரங்களை உத்தியோகஸ்தர் முதல் ஏழைகளை சாதாரணமாக உபயோகிக்கலாம்.

2¾ அகலம் 5 முழம் 1க்கு	ரூ	1—12—0
ஷை சரிகை சிர் 1க்கு	ரூ	1—14—0

தபால் செலவு வி. பி. வேறு

மற்றும் ஜவுளி வியாபாரிகளுக்கு வேண்டிய சரிகை போட்ட 200 நெ துப்பட்டாக்கள் முதலியனவும்கிடைக்கும். கமிஷனுக்கு சகாயமாக ஆடர்படி வாங்கி அனுப்பப்படும்.

மற்ற விபரங்களுக்கு எழுதகோருகிறோம்.

விலாசம் மானேஜர்

ஸ்ரீ சௌடாம்பிகா

ஜவுளி வர்த்தகசாலை

உரையூர் போஸ்டு

திருச்சி

"அறிவு விளக்கம்"

ஓர் மாதந்தரப் பத்திரிகை

வருடசந்தா தபாற்கூலி உள்பட 6 அணா

மாதிரிப்பிரதி இனும்

"அறிவு விளக்கம்" ஆபீஸ்

உடுமலைப்பேட்டை.

முந்துங்கள்! ரூபாய் ஒன்றே ஏமாந்து விடாதீர்கள்

முந்துங்கள்!! ரூபாய் ஒன்றே ஏமாந்து விடாதீர்கள்

உலகப் பிரசித்திபெற்ற

5 மாத இங்கிலீஷ் கோர்ஸ்

நேரிலிருந்து படிப்பதுபோல் தபால் மூலம் தொழிலுக்கு யாதொரு இடையூறின்றி, தமிழ் தெரிந்த எவரும் படித்து திருப்தியடையலாம். டி கோர்ஸை நேரில் வந்து படிப்பவர்கள் மாத மொன்றுக்கு ரூ. 5 வீதம் கொடுத்துப் படித்திருக்கிறார்கள். நேரில்வந்து படிப்பதற்கு 50 மாணவர்களுக்கு மேல் எடுக்க இடமில்லை. ஆகையால் செப்டெம்பர் 15-உக்குள் அப்படி படிக்க விரும்புவோர் ரூ. 5 அனுப்பி பதிவு செய்யக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஐந்து வருஷ கல்வி ஒரே வருஷம்.

சே. எஸ். முனைக்சாமி:—நான் மூன்றாம் வகுப்புப் படிப்போடு டி 5-மீ கோர்ஸில் 1923-ம வருஷம் சேர்ந்து மாதமொன்றுக்கு ரூ. 5 வீதம் கொடுத்துப்படித்தேன். இங்கிலீஷ் அட்சரத்திலிருந்து ஆரம்பித்து; வார்த்தைகள், வாக்கியங்களமைந்த கேள்விகள், விடைகள், சம்பாஷணை, கடிதம் எழுதுதல், கடிதம் எழுதுதல் முதலியவை கற்றுக்கொடுக்கப்பட்டது. சுமார் 50 மாணவர்கள் வரை பூர்த்தி செய்தார்கள். 5 மாதம் கோர்ஸ் முடிந்தவுடன் ஐ.ரேப்யர் கோர்ஸில் சுமார் 9 மாதங்கள் வாசித்தேன். தற்சமயம் என் அறிவு சுமார் 5 வருஷப் படிப்பிற்கு மேலாக இருக்கிறதென்பது உண்மை. தபால் மூலம் அதே கோர்ஸை மாதம் ஒன்றுக்கு ரூபா 1 வீதம் கற்றுக்கொடுப்பது நம் தமிழ் நாட்டு ஏழை மக்களின் பொருட்டன்றி வேறல்ல.

ஆங்கில பாஷையின் அஸ்திவாரம்

எஸ். பக்கிரிசாமி பிள்ளை:—நான் 5-வது வகுப்பு வரை சுயமாகவே படித்து அநேக புஸ்தகங்களை வாங்கி வாசித்ததில் பிரயோஜனப்படாமல் டி கோர்ஸில் சேர்ந்து வாசிக்கிறேன். 1 வாரத்தில் முதல் கோர்ஸை முடித்துவிட்டு இரண்டாம் கோர்ஸ் படிக்கிறேன். பாடங்களில் ஆங்காங்கே கடின பதங்களுக்கு அர்த்தம், உச்சரிப்பு, குறிப்புகள், அப்பியாசங்கள், முதலியவை காணப்படுவதால் உபாத்தியாயரின்றிப் படித்துக்கொள்ளலாம். சந்தேகங்கள், விடைகள் முதலியன சரியான பிரகாரம் திருத்தப்பட்டிருக்கின்றன. 4, 5, 6, 7 வகுப்பு மாணவர்களுக்கும், தொழிலாளிகளுக்கும், வியாபாரிகளுக்கும் இது நல்ல அஸ்திவாரக் கோர்ஸ் என்றே சொல்லலாம். உடனே சேர்ந்து நன்மையடைவீர்களாக.

உடனே எழுதுங்கள்.

பிரின்சிபால், கேம்பிரிஜ் இன்ஸ்டிடியூட், நாகூர்

ஐயா, இன்று ரூபாய் 1 மணியார்டர் செய்திருக்கிறேன். என் பெயரை பதிவு செய்துகொண்டு உடனே முதல் கோர்ஸ் பாடங்களையும், பிராஸ்-பெக்டஸ் பாரங்கள் முதலியவைகளையும் அனுப்பி வையுங்கள். பாடம் முடிந்தவுடன் பணமனுப்பி ஒவ்வொரு கோர்ஸையும் பெற்றுக்கொள்வதோடு விடைகளை ஒழுங்காய் அனுப்பிவைக்கிறேன்.

பெயர்.............. .... தெளிவான விலாசம்..............................

ஸ்ரீமத் ஞானியார் ஆச்சிரமம்.

உண்மை யன்பார்ந்த ஐயா!

ஓர் ஆச்சிரமம் காண வேண்டும் என்று நீடிய நாட்களாக எண்ணியிருந்தேன். இறைவனார் இன்னருள் துணைகொண்டு இந்நோக்கத்துடன் இப்போது எனது பிறப்பிடமாகிய மணம்பூண்டியிலே தென்பெண்ணை நதி தீரத்தில் உள்ளூர் 'பக்த பால சமாஜ'த்தின சார்பான சில அன்பர்கள் உதவி கொண்டு ஒரு சிறு கட்டிடம் வாங்கியுள்ளேன். அதனை ஆச்சிரமத்திற்குரிய வசதியாக அமைப்பதற்கும் வாசக-புத்தக பிரார்த்தனை-சாலைகளை வைத்து நடத்துவதற்கும் போதிய பொருள் தேவை.

தாங்கள் நேராக உதவியும், அன்பர்கள் மூலமாகச் சேகரித்தும் இயன்ற தொகையை இயன்ற விரைவில் எனக்கு அனுப்பியாதரிக்க வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

அன்புள்ள 'அடிமைக்கடிமை'

ம. ரா. குமாரசாமி

ஸ்ரீமத் ஞானியார் ஆச்சிரமம்

மணம் பூண்டி

திருக்கோவலூர் (தெ. ஆ. ஜி)

Photo Hand Camera



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போடோ பிடிக்கலாம். போடோவின் அளவு $3\frac{1}{2}$" x $2\frac{1}{2}$" ஆகும், இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லா சாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ 4—12—0.

Sole Agents ஸ்ரீதனம் அண்டு கம்பெனி, பிரும்ம சமாஜம், ஜி. டி. மதராஸ்

பெட்ரோமாக்ஸ் லைட்.



லைட்கள், மாண்டில், டூம், தனித்தனி சாமான்யாவும் விலைகயமாய் கிடைக்கும். கேட்லாக் இனும் ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

மதனகல்ப லேகியம்.

மலக்கட்டு, பசியின்மை, தாதுநஷ்டம் சொப்பனஸ்கலிதம் முதலியவற்றைக் குணப்படுத்தி இந்திரியத்தைக் கட்டுவதில் சிறந்த ருசிகர சித்தராயனம். விலை சேர் 1க்கு ரூ. 2 வி. பி. வேறு

மகா ரசகெந்திமெழுகு.

கிராத வெண்குஷ்டம், கருங்குஷ்டம், தமிர் குஷ்டம், மேகம், ரணம், சூலை முதலிய கொடிய ரோகங்களை 1 மண்டலத்தில் பறக்கடிக்கிறது. 1 மண்டலமருந்து விலை ரூ 4 வி. பி. வேறு கேட்லாக் இனும்.

சூதகரோக நிவாரணி.

பெண்களுக்குள்ள சூதககட்டி, சூதகச்சிக்கல் வயிற்று வலி, சதை வளர்ச்சி முதலியவற்றைத் தீர்க்கும் அமிர்த சஞ்சீவி. கேட்லாக் இனும் விலை ரூ. 2. வி. பி. வேறு.

ஆனந் நிலையம், திருச்செங்கோடு.

சரீர மர்ம சாஸ்திரம்.

(ஓர் மானிட மர்ம நூல்.)

இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும் அவர்களது ஸ்தானங்களின் அமைப்பும், சம்சார சுகம் குடும்ப ரஹசியம், மணவாழ்க்கை மர்மம், அடங்கியது. கல்யாணமானவருக்கும், கல்யாணமாகாத சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாத நூல்.



64 படங்களுடன் 200 பக்கங்கள் பெரிய புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1.

எல்லா புஸ்தக வியாபாரியிடமும் கிடைக்கும். பினாங்கு, மலேக்கா முதலிய தேசங்களில் உள்ளவர்கள் ரூ. 1—8—0 முன்பணம் அனுப்பி புஸ்தகம் பெற்றுக்கொள்ளவும்.

மாணிக்க விலாசம் பிரஸ்.

அருணாசல முதலி வீதி, மதராஸ்

ஆருடம்:—தர்ம ஞானமான கேள்விகள் 9-க்கு விடைகளெழுதி அனுப்ப ரூ. 1. மேற்கொண்டு கேள்வி 1-க்கு அணா 4. தபால் செலவு வேறு. இதற்கு முன்பணம் தபால் செலவுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

வி. எஸ். அய்யர், சுப்பிரமண்ய உபாசி, பழனி Palni P. O. (S. I.)

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.